පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය : 290
ආයතනයේ නම : කෘෂිකර්ම හා වැවිලි කර්මාන්ත අමාත්‍යාංශය

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம்: 290
நிறுவனத்தின் பெயர்: கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் நிறுவனங்கனிற்குப் பெறுப்பான கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடாபாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

Parliamentary Series No: 290
Name of the institution: Ministry of Agriculture and Plantation Industries

Submission of observations of Hon. Minister in charge of the institutions and Steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119(4)

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம்: 290

நிறுவனத்தின் பெயர்: கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

| அரச நிறுவனங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் என்பவற்றின் நிதி இணக்கல் மற்றும் செயற்பாடு சார்ந்த செயலாற்றுகை ஆகியவற்றை மெய்நிகர் தகவல் முகாமைத்துவ முறைமையின் மூலம் மதிப்பிடுதல் - நிதி ஆண்டு 2021 | |
|---|---|
| **கமத்தொழில் அமைச்சு**<br>**முதலாம் பாகம்: 78.00** | |
| **குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள் / குழுவால் வழங்கப்பட்ட உத்தரவுகள்** | **குழுவால் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்ய / வழங்கப்பட்ட பரிந்துரைகளை செயற்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை** |
| கணக்காய்வாளர் நாயகம் வினவிய ஒவ்வொரு கணக்காய்வு வினாவுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளிக்கப் பட்டு ருக்கவில்லை. | முடிந்தளவு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், கணக்காய்வு வினாக்களுக்கு உடனடியாக பதிலளிக்கப்பட்டு, அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் அது பற்றி அறிவிக்கப் பட்டுள்ளது. |
| உள்ளகக் கணக்காய்வு வினாக்களுக்கு ஒரு மாதத்திற்குள் பதில்கள் சமர்ப்பிக்கப் பட்டு இருக்கவில்லை. | முடிந்தளவு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கணக்காய்வு வினாக்களுக்கு தாமதியாமல் பதில்களை அனுப்ப தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இது பற்றி அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் மீண்டும் அறிவிக்கப் பட்டுள்ளது. |
| வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பில் இருந்து வெளியாகிய மிகைகள், பற்றாக்குறைகள் என்பன பற்றிய பரிந்துரைகள் மற்றும் ஏனைய பரிந்துரைகள் ஆகியன உரிய காலத்திற்குள் செயற்படுத்தப் பட்டு இருக்கவில்லை. | உரியவாறு சீராக்கல்கள் ஆராயப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. 2023 ஆம் ஆண்டிற்கான பொருட்கள் கணக்கெடுப்பின் மூலம் உரிய பற்றாக்குறைகளையும் மற்றும் மிகைகளையும் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya"
Rajamalwatta Aveue, Battaramulla

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| | |
|---|---|
| அனைத்து வாகனங்களுக்கும் உரிமைப் பத்திரங்களை உறுதிப் படுத்துகின்ற ஆவணங்கள் இருந்திருக்கவில்லை. | கமத்தொழில் அமைச்சினால் பயன்படுத்தப்படும் அனைத்து வாகனங்களிலும், 38 வாகனங்களின் உரிமையை உறுதிப் படுத்தும் கடிதங்கள் அமைச்சிடம் உள்ளன. மேலும் 14 வாகனங்களின் உரிமை ஏனைய நிறுவனங்களின் பெயரில் உள்ளன. அவற்றின் ஒப்பந்தத்தின் அடிப்படையில் எதிர்காலத்தில் அந்த வாகனங்களை இந்த அமைச்சிக்கு மாற்றிக் கொடுப்பதற்கு அல்லது ஒப்படைக்கச் செய்வதற்கு தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| பொது வாகனக் கொட்டகையில் உள்ள வாகனங்களுக்கான நாளாந்த ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகள் என்பன கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப் பட்டு இருக்கவில்லை. | பொது வாகனக் கொட்டகையில் உள்ள வாகனங்களுக்கான நாளாந்த ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகள் என்பன மாதாந்தம் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. |
| அனைத்து வாகனங்களினதும் அரச சின்னங்களுக்கு நிறம் பூசப் பட்டு இருக்கவில்லை. | அனைத்து வாகனங்களினதும் அரச சின்னங்களுக்கு நிறம் பூசப் பட்டுள்ளது. |
| ஒவ்வொரு வாகனத்திற்கும் பதிவுக் குறிப்புப் புத்தகங்கள் இற்றைப்படுத்திய அடிப்படையில் பேணப் பட்டு இருக்கவில்லை. | தற்பொழுது ஒவ்வொரு வாகனத்திற்குமான பதிவுக் குறிப்புப் புத்தம் இற்றைப்படுத்தப் பட்டுள்ளது. |
| 2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்கப் பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப் பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், நிறுவனத்திற்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பற்றிய எந்தவித சோதனையும் மேற்கொள்ளப் பட்டு இருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து, அமைச்சினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற வாகனங்களின் எரிபொருள் நுகர்வு தொடர்பான சோதனை மேற்கொள்ளப்பட்டு வந்தது. நாட்டில் ஏற்பட்டிருந்த கோவிட் தொற்றுநோய் நிலவரம் காரணமாக, பணிகள் இடை நிறுத்தப்பட்டன. இதன் காரணமாக, 2021 ஆம் ஆண்டில் அனைத்து வாகனங்களினதும் எரிபொருள் தொடர்பான சோதனைகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருந்தது என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். |



L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| | |
|---|---|
| நி. பி. கு. இலக்கம் 94 (1) இன் பிரகாரம், ஒரு செலவின தலைப்புக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்திய பின்னர், எஞ்சிய நிதி ஒதுக்கீட்டு வரையறை, அனுமதித்திருந்த வரையறைகளை விஞ்சி பொறுப்புக்களை சுமத்தி இருந்தது. | முடிந்தளவில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நிதியேற்பாட்டு வரையறையை கடைப்பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும், நி. பி. கு. இலக்கம் 94 (2) இன் பிரகாரம், ஒருசில பொறுப்புக்களை ஏற்படுத்திக் கொள்ள நேர்ந்துள்ளது. மேலும் நிதியேற்பாட்டு வரையறையை கடைப்பிடித்து பொறுப்புக்களை முகாமை செய்யும் பொருட்டு நடவடிக்கையை எடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது. |
| உரிய காலப் பகுதியை தாண்டி நிதிகள் ஏனைய நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டு இருடிருந்தன. | ஏனைய நிறுவனங்களின் செயலாற்றுகைத் திட்டத்தின் பிரகாரம் நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. |
| ஒரு வருடத்திற்கும் மேலாக இருந்து வருகின்ற கடன் நிலுவைகள் அவதானிக்கப்பட்டன. | ஒரு ஆண்டு காலத்திற்கு மேலாக நிலுவையாக இருந்து வருகின்ற கடன் நிலுவையை அறவிடுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| நி. பி. கு. இலக்கம் 371 இன் அடிப்படையில் வழங்கப்பட்ட சமயோசித வசக்கட்டுநிதி, கரும பணிகள் முடிவடைந்து ஒரு மாதத்திற்குள் தீர்ப்பனவு செய்யப் பட்டு இருக்கவில்லை. | நி. பி. கு. இலக்கம் 371 இன் பிரகாரம் வழங்கிய சமயோசித வசக்கட்டுநிதியை, உரிய பரிசீலனையை மேற்கொண்டு, விரைவில் தீர்ப்பனவு செய்வதற்கு அறிவுரைகளை வழங்கி அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும். |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| இரண்டாம் பாகம்: 85.00 | |
|---|---|
| திட்டமிடப்பட்டு இருந்த பயிற்சி வாய்ப்புகளில் வழங்கப்பட்டு இருந்த பயிற்சி வாய்ப்புகளின் எண்ணிக்கை 50% வீதத்திற்கும் குறைவாகவே இருந்திருந்தது. | 1. ஜனாதிபதி செயலகம் மற்றும் சுகாதார அமைச்சு மற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு ஆகியன கோவிட்-19 தொற்றுநோய் நிலவரத்தை கட்டுப்படுத்துவது தொடர்பாக வழங்கிய உத்தரவுகளின் காரணமாக 2021 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் எண்ணிக்கை 50% வீதத்திற்கும் குறைவாகவே இருந்தது. பின்வரும் கடிதங்கள் மற்றும் சுற்றறிக்கைகள் ஆகியவற்றின் பிரகாரம், கடமைக்காக அலுவலகங்களுக்கு உத்தியோகத்தர்கள் அழைக்கப்படுவதை மட்டுப்படுத்துதல் மற்றும் மக்கள் கூடுவதைக் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றின் அடிப்படையில் வெளியிடப்பட்டிருந்தன.<br><br>I. அரச சேவையை வழமையாக நிருவகித்து செல்வது பற்றிய பொது நிருவாக சுற்றறிக்கைகள்<br>• 2021.04.27 ஆம் திகதிய 02/2021 (I) ஆம் இலக்கப் பொது நிருவாக சுற்றறிக்கை<br>• 2021.05.10 ஆம் திகதிய 02/2021 (II) ஆம் இலக்கப் பொது நிருவாக சுற்றறிக்கை<br>• 2021.07.30 ஆம் திகதிய 02/2021 (III) ஆம் இலக்கப் பொது நிருவாக சுற்றறிக்கை<br>• 2021.08.08 ஆம் திகதிய 02/2021 (IV) ஆம் இலக்கப் பொது நிருவாக சுற்றறிக்கை<br>• 2021.01.01 ஆம் திகதிய 02/2021 (V) ஆம் இலக்கப் பொது நிருவாக சுற்றறிக்கை<br>• 2021.12.30 ஆம் திகதிய 02/2021 (VI) ஆம் இலக்கப் பொது நிருவாக சுற்றறிக்கை<br><br>II. மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடு மற்றும் அனுமதிக்கப்பட்ட பொது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் விதம் என்பன பற்றிய சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் PA/DDG/P II/3/கோவிட் பொது/2020 ஆம் இலக்க 2021.08.16 ஆம் திகதிய கடிதம்<br><br>III. உலகளாவிய ரீதியில் கொரோனா தொற்றுநோய் நிலவிய காலப் பகுதியில் தொலைவில் இருந்து கடமைப் பணிகளை நிறைவேற்றுவது பற்றி ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள சுற்றறிக்கைகள்<br>• இலக்கம் PS / GPA / சுற்றறிக்கை / 20 / 2020 - 2020.04.18<br>• இலக்கம் PS / GPA / சுற்றறிக்கை / 21 / 2021 - 2020.05.14<br>• இலக்கம் PS / GPA / சுற்றறிக்கை / 33 / 2020 - 2020.10.29<br><br>2. இந்த அமைச்சு பௌதீக ரீதியில் பயிற்சிப் பாடநெறிகளை ஏற்பாடு செய்த போதிலும், மேற்படி சுற்றறிக்கைகளின் பிரகாரம் உத்தியோகத்தர்களை அலுவலகத்திற்கு அழைப்பதில் இருந்த கட்டுப்பாடு காரணமாக பௌதீக ரீதியில் பயிற்சிப் பாடநெறிகளை நடத்துவது மட்டுப்படுத்தப்பட்டது. |

E.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| | |
|---|---|
| | 3. உத்தியோகத்தர்களை அலுவலகத்திற்கு வரவழைப்பதில் விதிக்கப்பட்டு இருந்த மட்டுப்பாடு, அங்கு ஏற்பட்ட தொழில் நுட்பக் கோளாறுகள், அதாவது உத்தியோகத்தர்களுக்கு போதிய உபகரணங்கள் மற்றும் இணையத் தள வசதிகள் இல்லாமை மற்றும் அதற்கான செலவுகள் என்பன காரணமாக உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிப் பாடநெறிகள் ஒன்லைன் ஊடாக நடத்தப்பட்டன. இதனால் பயிற்சிப் பாடநெறிகளை குறைக்க நேர்ந்தது.<br>4. மேற்கூறிய காரணங்களால், 2021 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் எண்ணிக்கை 50% வீதத்திற்கும் குறைவாகவே இருந்தது.<br>5. இதுவரை, 2023 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் 80% வீதத்திற்கும் அதிகமான வாய்ப்புகள் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும் 2024 ஆம் ஆண்டில் பயிற்சிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. |
| நிறுவனத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம் முனைப்பழியற்றதாக அல்லது பாதகமானதாக இருந்திருந்தது. | இது சரியான கூற்றல்ல. 2021 ஆம் ஆண்டு திசம்பர் மாத நிதிக் கூற்றின் பிரகாரம், கணக்காய்வு அபிப்பிராயம் முனைப்பழியுள்ள அபிப்பிராயமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகையால், முனைப்பழியற்ற அல்லது பாதகமான கணக்காய்வு அபிப்பிராயம் வெளியிடப்பட்டு இருக்கவில்லை. |
| கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப் பட்டு இருக்கவில்லை. | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ள பரிந்துரைகள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன. |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு<br>முதலாம் பாகம்: 94.00 | |
|---|---|
| குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள் / குழுவால் வழங்கப்பட்ட உத்தரவுகள் | குழுவால் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்ய / வழங்கப்பட்ட பரிந்துரைகளை செயற்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை |
| அனைத்து வாகனங்களுக்கும் உரிமைப் பத்திரங்களை உறுதிப் படுத்துகின்ற ஆவணங்கள் இருந்து இருக்கவில்லை. | ஏனைய அமைச்சுக்களால் பெறப்பட்ட வாகனங்கள் கையகப்படுத்தப்பட்டன. பல தடவைகள் அமைச்சின் பெயர் மாற்றம் செய்யப்பட்டதன் காரணமாக குறிப்பிட்ட சில வாகனங்களின் உரிமை இந்த அமைச்சிடம் கையகப்படுத்தப்பட்டு வருகின்றது. |
| அனைத்து வாகனங்களினதும் அரச சின்னங்களுக்கு நிறம் பூசப்பட்டு இருக்கவில்லை. | இதன் நிமித்தம், அரச தொழிற்சாலையின் மூலம் கேள்வி விலை மனுக்கள் அழைக்கப்பட்டன. கோவிட் 19 தொற்றுநோய் பரவிய காரணத்தினால், வாகனங்களின் அரச சின்னங்களுக்கு நிறம் பூசும் பணி மேற்கொள்ளப்படவில்லை. மேலும் பொது வாகனக் கொட்டகையில் உள்ள அனைத்து வாகனங்களினதும் முன்பக்க கண்ணாடிகளில் அரச சின்னம் பொறிக்கப்பட்டும் மற்றும் அமைச்சின் பெயர் குறிக்கப்பட்டும் உள்ளன. |
| வாகனங்கள் பாவனைக்கு ஒவ்வாத நிலைக்கு மாறிய பின்னர், 08 மாதங்களுக்கு குறைந்த ஒரு காலப் பகுதியில் அந்த வாகனங்கள் அகற்றப்பட்டு இருக்கவில்லை. | மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் மோட்டார் வாகன சோதனையாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட வாகன உடற்பாக சோதனையின் போது, இந்த வாகனத்தின் செஷி இலக்கத்தை (32 ஸ்ரீ 6900) கண்டுபிடிக்க முடியாத காரணத்தினால் கழிவுப் பெறுமானத்தில் விற்பனை செய்ய பரிந்துரைக்கப்பட்டது. மேலும் ஏலத்தில் விடப்பட்டு இருந்த ஏனைய வாகனங்களும் இலங்கைப் பெருந்தோட்டக் கூட்டுத் தாபனம் விடுத்த வேண்டுகோளின் பேரில் அதற்கு கையளிக்கப்பட்டன. இது தொடர்பான வர்த்தமானி விளம்பரத்திற்கு செலவாகும் செலவுடன் ஒப்பிடும் போது வாகனத்தை ஏலத்தில் விடுவது பலனளிக்காதது என்ற விடயம் அவதானிக்கப்பட்டதால், அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவில்லை. எனினும், தற்போது வாகனங்களை அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| | |
|---|---|
| 2016.12.29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்கப் பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப் பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், நிறுவனத்திற்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பற்றிய எந்தவித சோதனையும் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில், 11 வாகனங்கள் எரிபொருளுக்காக சோதனை செய்யப்பட்டன. மேலும் கோவிட் - 19 தொற்றுநோய் பரவியிருந்ததால், எஞ்சிய வாகனங்களுக்கு எரிபொருள் சோதனையை மேற்கொள்ள முடியவில்லை. |
| ஒரு வருடத்திற்கு அதிக காலம் நிலுவையாக இருந்து வருகின்ற நிலுவை கடன்கள், நிலுவையாக இருந்து இருந்தன. | **01. <u>இடமாற்றம் பெற்று சென்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய தொகைகள்</u>**<br><br>**திரு எச். டீ. கே. கொட்வின்** (அலுவலக உதவியாள்) - ரூ. 36,116.00<br>இந்த ஊழியரின் கடன் நிலுவையை பதிவழிக்கும் பொருட்டு திறைசேரியின் அனுமதியைப் பெறுவதற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.<br><br>**02.<u>பதவி இடைநிறுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய தொகைகள்</u>**<br><br>**திரு டப்ளியூ. ஏ. எல். ஜி. விஜேசிங்க** - ரூ. 255,997.00<br><br>இந்த உத்தியோகத்தருக்கு சொந்தமான சொத்தில் இருந்து கடனை அறவிடுவதற்கு சட்டப்பூர்வ அறிவுறுத்தல்கள் கிடைத்துள்ள போதிலும், காணியின் உரிமை பணிப்பாளர் நாயகத்தின் பெயருக்கு வழங்கப்பட்டுள்ளதால், அதனை பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளரின் பெயருக்கு மாற்றுவதற்கு தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.<br><br>**திரு இ. எல். லயனல்** (அலுவலக உதவியாள்) - ரூ. 30,760.00<br><br>இந்த ஊழியரின் கடன் நிலுவையை பதிவழிக்கும் பொருட்டு திறைசேரியின் அனுமதியைப் பெறுவதற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| | |
|---|---|
| | **திரு நிஷாந்த விஜேகோன் (அலுவலக உதவியாள்) - ரூ. 111,754.00**<br><br>சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வழக்குக்கு தேவையான ஆவணங்கள் தாக்கல் தயாரிக்கப்பட்டு உரிய ஊழியருக்கு எதிராக வழக்கை தாக்கல் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.<br><br>**03. <u>சேவையில் இருந்து விலகிச் சென்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய தொகைகள்</u>**<br><br>**திரு எம். எம். எஸ். திஸாநாயக்க (அலுவலக உதவியாள்) - ரூ. 128,002.00**<br><br>இந்த ஊழியர் சேவையில் இருந்து விலகிச் சென்றிருந்தாலும் அவ்வப் பொழுது பகுதியளவில் பணம் செலுத்தப்பட்டு கடனை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆகையால், எஞ்சிய நிலுவை ரூ. 128,002.00 தொகையாகும். இந்தத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| இரண்டாம் பாகம் : 85.00 | |
|---|---|
| அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கிய செயலாற்றுகை சார்ந்த ஒப்பந்தங்கள் தயாரிக்கப்பட்டு அத்தகைய ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கி செயலாற்றுகை சார்ந்த ஒப்பந்தங்கள் தயாரிக்கப்பட்டு அத்தகைய ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்படாது இருந்தாலும், பதவியணியில் உள்ள ஒவ்வொரு ஊழியர் தொடர்பான செயலாற்றுகை மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்பட்டு தனியாள் கோவைகளினுள் அவை உள்ளீர்க்கப்பட்டுள்ளன. |
| திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் அளவு 50% வீதத்திற்கும் குறைவாகவே இருந்திருந்தது. | 2021 ஆம் ஆண்டுக்கான பதவியணியினர் பயிற்சித் தேவைகளை கருத்தில் கொண்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்ட போதிலும், நிலவிய கோவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக அலுவலகங்கள் மூடப்பட்டதாலும், மிகக் குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர்கள் அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டதாலும், திட்டமிட்டவாறு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்த முடியவில்லை. 2021 ஆம் ஆண்டிற்கான பதவியணிப் பயிற்சி செலவின விடயத்திற்கு ரூ. 1,700,000/= ஒதுக்கப்பட்டது. அதில் ரூ. 980,000/= பயன்படுத்தப்பட்டுள்ளது. |
| நிறுவனத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம் முனைப்பழியற்றதாக அல்லது பாதகமானதாக இருந்திருந்தது. | கணக்காய்வாளர் நாயகத்தின் PAL / E / MP / 02 / 21 / 04 ஆம் இலக்க 2022.06.16 ஆம் திகதிய கணக்காய்வு சுருக்க அறிக்கையின் மூலம் இந்த அமைச்சின் கணக்குகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயமாக முனைப்பழியுள்ள ஒரு கணக்காய்வு அபிப்பிராயம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகையால், முனைப்பழியற்ற கணக்காய்வு அபிப்பிராயம் வெளியிடப்படவில்லை. |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.



Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| நெல் மற்றும் தானியம், இயற்கை உணவு, மரக்கறி, பழ, மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு பயிர்கள் ஊக்குவிப்பு, விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில் நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சு<br>முதலாம் பாகம்: 66.00 | |
|---|---|
| குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள் / குழுவால் வழங்கப்பட்ட உத்தரவுகள் | குழுவால் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்ய / வழங்கப்பட்ட பரிந்துரைகளை செயற்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை |
| 2004.05.11 ஆம் திகதிய பொதுக் கணக்குகள் பற்றிய 171 / 2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், அரச ஊழியர்களின் சம்பளங்களை செயலாக்கம் செய்யும் கணனி மென்பாகத்திற்கான முதல் கடவுச்சொல் கணக்காளரினால் அல்லது அங்கீகாரம் பெற்ற தகவுடைய அதிகாரி ஒருவரினால் மட்டுமே பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | தற்போது கணனி மென்பாகத்திற்கான முதல் கடவுச்சொல் பிரதான கணக்காளரினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. |
| 2004.05.11 ஆம் திகதிய பொதுக் கணக்குகள் பற்றிய 171 / 2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், அரச ஊழியர்களின் சம்பளங்களை செயலாக்கம் செய்யும் கணனி மென்பாகத்திற்கான முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது கடவுச்சொற்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை மாற்றப்பட்டு இருக்கவில்லை. | தற்போது குறித்த கடவுச்சொல் மாற்றப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. |
| வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | தற்போது பெறுகைத் திட்டத்தைத் தயாரித்து செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| | |
|---|---|
| உள்ளகக் கணக்காய்வு வினாக்களுக்கான பதில்கள் ஒரு மாத காலத்திற்குள் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் கணக்காய்வு வினாக்களுக்கு முறையாகவும், தாமதமின்றியும் பதில் அளிக்க ஏற்பாடு செய்யப்படும். இது பற்றி அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| நி. பி. கு. இலக்கம் 134 (2) இன் பிரகாரம், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கனக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | தற்பொழுது, அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் குறைந்தது 2 கூட்டங்களாவது நடத்தப்பட்டு இருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு 2021 ஆம் ஆண்டு இறுதியில் தாபிக்கப்பட்டது. இதனால் 02 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. |
| பொது வாகனக் கொட்டகையில் உள்ள வாகனங்களுக்கான நாளாந்த ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகள் என்பன கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | 2021 ஆம் நிதி ஆண்டுக்கான பொது வாகனக் கொட்டகையில் உள்ள வாகனங்களின் நாளாந்த ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகள் ஆகியன கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. ஆனாலும், தற்போது பொது வாகனக் கொட்டகையில் உள்ள வாகனங்களின் நாளந்த ஓட்டக் குறிப்புகள் மற்றும் சுருக்க அறிக்கைகள் ஆகியன கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. |
| அனைத்து வாகனங்களினதும் அரச சின்னங்களுக்கு நிறம் பூசப்பட்டு இருக்கவில்லை | 2021 ஆம் நிதி ஆண்டுக்கு அனைத்து வாகனங்களினதும் அரச சின்னங்களுக்கு நிறம் பூசப்படவில்லை. ஆனாலும், தற்போது அனைத்து வாகனங்களினதும் அரச சின்னங்கள் டிஜிட்டல் வாயிலாக அச்சிடப்பட்டு வாகனங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. |
| அரச வாகன விபத்துக்கள் தொடர்பாக, நி. பி. கு. இலக்கம் 103, 104, 109 மற்றும் 110 ஆகியவற்றின் பிரகாரம், உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | 2021 ஆம் நிதி ஆண்டுக்கு KW - 8202 இலக்க வாகனம் நி. பி. கு. இன் பிரகாரம் சோதனை செய்யப்பட்டுள்ளது. |
| 2016.12.29 ஆம் திகதிய 2016 / 30 ஆம் இலக்கப் பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள | 2021 ஆம் நிதி ஆண்டுக்கு வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பற்றிய சோதனைகளை மேற்கொள்வதற்கு அனைத்து ஆவணங்களும் தயாரிக்கப்பட்டு இருந்தன. ஆனாலும், அந்த கால கட்டத்தில் நாட்டில் ஏற்பட்டு இருந்த நெருக்கடி நிலைமை காரணமாக, எரிபொருள் நுகர்வு பற்றிய சோதனையை மேற்கொள்ள முடியவில்லை. எனவே, தற்போது அனைத்து வாகனங்களிலும் |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| | |
|---|---|
| ஏற்பாடுகளின் பிரகாரம், நிறுவனத்திற்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பற்றிய எந்தவித சோதனையும் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | எரிபொருள் பற்றிய அந்த சோதனையை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. |
| வங்கி இணக்கல் கூற்றுக்கள் உரிய தினத்தில் தயாரிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டு கண்ககாய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டு முதல் உரிய தினத்திற்கு வங்கி இணக்கல் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. |
| வங்கி இணக்கல் கூற்றுக்களில் இருந்து கண்டறியப்படாத சீராக்க வேண்டி இருந்த நிலுவை தொடர்பாக, நி. பி. கு. இன் பிரகாரம் ஒரு மாதத்திற்குள் தீர்ப்பனவு செய்யப்பட்டு இருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கான வங்கி இணக்கல் கூற்றின் பிரகாரம், சீராக்க வேண்டிய அனைத்து நிலுவைகளும் தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளன. |
| நி. பி. கு. இலக்கம் 371 இன் பிரகாரம் வழங்கிய சமயோசித வசக்கட்டுநிதி, கரும பணிகள் நிறைவடைந்து ஒரு மாதத்திற்குள் தீர்ப்பனவு செய்யப்பட்டு இருக்கவில்லை. | இது பற்றி உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இது வரை பெறப்பட்ட வசக்கட்டு முற்பணத்தை, பணிகள் முடிந்தவுடன் விரைவில் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| உரிய ஏற்பாடுகளுக்கு இணங்க சேகரித்த வருமானம், மீள செலுத்தப்பட்டு இருக்கவில்லை. | சேகரித்த வருமானம், வருமானக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. வருமானக் கணக்கில் இருந்து மீளச்செலுத்தப்படாது. |
| சேகரித்திருந்த வருமானம், நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட்டு அல்லது வைப்பு கணக்கில் பிடித்து வைக்கப்பட்டு | மாதாந்த வருமானத்திற்கு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. |

L.P. S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| | |
|---|---|
| ஒரு மாதத்திற்கு குறைந்த காலத்தினுள் வருமான கணக்குக்கு வரவு வைக்கப்பட்டு இருக்கவில்லை. | |
| பதவியணியின் அனைத்து ஊழியர்களுக்கும் எழுத்துப்பூர்வமான பணிகள் எதுவும் ஒப்படைக்கப்பட்டு இருக்கவில்லை. | தற்பொழுது பதவியணியின் அனைத்து ஊழியர்களுக்கும் எழுத்திலான கடமைப் பணிகள் ஒப்படைக்கப் பட்டுள்ளன. |
| 2017.09.20 ஆம் திகதிய 2017 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பதவியணி பற்றிய விபரங்கள், ஒரு காலாண்டு முடிவடைந்து ஒரு மாத காலத்திற்குள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு இருக்கவில்லை. | 2021 ஆம் நிதி ஆண்டுக்கு 2017.09.20 ஆம் திகதிய 2017 இன் 4 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம், ஒரு காலாண்டு முடிவடைந்து ஒரு மாதத்திற்குள் பதவியணி பற்றிய விபரங்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்படவில்லை. ஆனாலும், தற்போது உரிய தினத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.



Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| இரண்டாம் பாகம்: 62.00 | |
|---|---|
| நிறுவனம் பற்றிய தேவையான தகவல்களை பொது மக்களுக்கு வழங்க ஒரு இணையத் தளம் உருவாக்கப்பட்டு பேணப்பட்டு இருக்கவில்லை. | தற்போது, பொது மக்களுக்கு தகவல்களை வழங்க அமைச்சினால் ஒரு இணையத் தளம் பேணப்பட்டு வருகின்றது. |
| நிறுவனத்தில் பேணப்படும் இணையத் தளத்தின் மூலம் பொது மக்களின் முறைப்பாடுகளையோ அல்லது பாராட்டுக்களையோ பதிவு செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டு இருக்கவில்லை. | பொது மக்களுக்கு முறைப்பாடுகளை செய்ய அல்லது பாராட்டுக் குறிப்புகளை இடுவதற்கு கமத்தொழில் அமைச்சின் இணையத் தளத்தின் ஊடாக வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. |
| நிறுவனத்தின் பிரஜைகள் / வாடிக்கையாளர் சாசனம் செயற்படுத்தப்படுவது பற்றி கண்காணிப்பதற்கும் மற்றும் மதிப்பிடுவதற்கும் நிறுவனத்தினால் ஒரு முறையியல் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | பிரஜைகள் / வாடிக்கையாளர் சாசனத்தை செயற்படுத்துவது பற்றி கண்காணிப்பதற்கும் மற்றும் மதிப்பிடுவதற்கும் உரிய முறையியல்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன. |
| 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் திகதிய 02 / 2018 ஆம் இலக்கப் பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் முறையாக தயாரிக்கப்படும் ஒரு மனித வளத் திட்டம் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் திகதிய 02 / 2018 ஆம் இலக்கப் பொது நிருவாக சுற்றறிக்கையினது ஏற்பாடுகளின் பிரகாரம், 2021 ஆம் நிதியாண்டிற்கு முறையாக தயாரிக்கப்பட்ட மனித வளத் திட்டம் எதுவும் இல்லாது இருந்தாலும், மனித வளத் திட்டத்தை தயாரிப்பதற்கு அமைச்சினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| தயாரிக்கப்பட்ட மனித வளத் திட்டத்தின் மூலம் பதவியணியில் 50% வீதத்திற்கும் அதிகமான ஊழியர்களுக்கு வருடத்திற்கு | 2023 ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில், சுமார் 80 ஊழியர்கள் இலங்கை மன்றத்தினால் நடத்தப்பட்ட பயிற்சிப் பாடநெறிகளில் பங்குபற்றினர். ஏறக்குறைய 32 மணித்தியால பயிற்சி வாய்ப்புகள் கிடைத்தன. |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| | |
|---|---|
| குறைந்தபட்சம் 12 மணித்தியால பயிற்சி வாய்ப்பு உறுதிப்படுத்தப் பட்டு இருக்கவில்லை. | நிதியேற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டதனால், பதவியணியில் குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர்களுக்கு பயிற்சி வாய்ப்புகளை வழங்குவதன் ஊடாக மனித வள அபிவிருத்தித் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டில் அந்தத் திட்டத்தை முறையாக செயற்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. |
| அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கி செயலாற்றுகை சார்ந்த ஒப்பந்தங்கள் தயாரிக்கப்பட்டு அத்தகைய ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | 2021 ஆம் நிதி ஆண்டுக்கு அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கிய செயலாற்றுகை சார்ந்த ஒப்பந்தங்கள் தயாரிக்கப்பட்டு அத்தகைய ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டு இருக்கவில்லை. ஆனாலும், தற்போது அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கிய செயலாற்றுகை சார்ந்த ஒப்பந்தங்கள் தயாரிக்கப்பட்டு அத்தகைய ஒப்பந்தங்களை செய்து கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் கமத்தொழில் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| மனித வள அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கும் ஆற்றல் மற்றும் திறன் அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துவதற்கும் நிறுவனத்தில் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் பெயர்குறித்து நியமிக்கப்பட்டு இருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் மனித வள அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கும், ஆற்றல் மற்றும் திறன் அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துவதற்கும் நிறுவனத்தில் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் பெயர்குறித்து நியமிக்கப்பட்டு இருக்கவில்லை. எனினும், இப்போது அந்த பணிக்கு சிரேஷ்ட உதவி செயலர் (நிர்வாகம்) என்ற பெயரில் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளார். |
| வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் எண்ணிக்கை திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் 50% வீதத்திற்கும் குறைவாகவே இருந்திருந்தது. | 2023 ஆம் ஆண்டில், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. ஆண்டு இறுதியில், கிட்டத்தட்ட 5 இலட்சம் ரூபா அளவான நிதி ஒதுக்கப்பட்டு இருந்தது. |
| அதிகபட்ச சேவை காலத்தை நிறைவு செய்த உத்தியோகத்தர்களை முறையாக இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | இராஜாங்க அமைச்சு 2020 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. அதிகபட்ச சேவை காலத்தை நிறைவு செய்த உத்தியோகத்தர்கள் எவரும் இல்லை. |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.



Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| உர உற்பத்தி மற்றும் விநியோகம், இயற்கை உரம் மற்றும் கிருமிநாசினிகள் பாவனை ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு முதலாம் பாகம்: 70.00 | |
|---|---|
| குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள் / குழுவால் வழங்கப்பட்ட உத்தரவுகள் | குழுவால் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்ய / வழங்கப்பட்ட பரிந்துரைகளை செயற்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை |
| 2004.05.11 ஆம் திகதிய பொதுக் கணக்குகள் பற்றிய 171 / 2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், அரச ஊழியர்களின் சம்பளங்களை செயலாக்கம் செய்யும் கணனி மென்பாகத்திற்கான முதல் கடவுச்சொல் கணக்காளரினால் அல்லது அங்கீகாரம் பெற்ற தகவுடைய அதிகாரி ஒருவரினால் மட்டுமே பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | தற்போது கணனி மென்பாகத்திற்கான முதல் கடவுச்சொல் பிரதான கணக்காளரினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. |
| 2004.05.11 ஆம் திகதிய பொதுக் கணக்குகள் பற்றிய 171 / 2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், அரச ஊழியர்களின் சம்பளங்களை செயலாக்கம் செய்யும் கணனி மென்பாகத்திற்கான முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது கடவுச்சொற்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை மாற்றப்பட்டு இருக்கவில்லை. | தற்போது குறித்த கடவுச்சொல் மாற்றப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் குறைந்தது 2 கூட்டங்களாவது நடத்தப்பட்டு இருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு 2021 ஆம் ஆண்டு இறுதியில் தாபிக்கப்பட்டது. இதனால் 02 கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| | |
|---|---|
| 2017.06.26 ஆம் திகதிய 1 / 2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவம் பற்றிய சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம், 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் அகற்றப்பட்ட சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் கட்டுப்பாட்டாளர் அதிபதியின் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டில், இந்த அமைச்சு தாபிக்கப்பட்டு இருக்கவில்லை. மேலும் 2021 ஆம் ஆண்டில், சொத்துக்கள் பற்றிய அறிக்கைகள் 2021.04.05 ஆம் திகதி கட்டுப்பாட்டாளர் அதிபதியின் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. |
| 2017.06.26 ஆம் திகதிய 1 / 2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவம் பற்றிய சுற்றறிக்கையின் 13 ஆம் பந்தியின் பிரகாரம் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை செயற்படுத்துவதை ஒருங்கிணைக்கும் பொருட்டு பொருத்தமான அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டு கட்டுப்பாட்டாளர் அதிபதியின் அலுவலகத்திற்கு அது பற்றி அறிவிக்கப்பட்டு இருக்கவில்லை. | பொருத்தமான அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| | |
|---|---|
| 2017.06.26 ஆம் திகதிய 1 / 2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 1 ஆம் பாகத்தின் 11.1 ஆம் பந்தியில் குறிப்பிடப் பட்டுள்ள காலப் பகுதிக்குள், நி. பி. கு. இலக்கம் 756 960 ஆகியவற்றின் பிரகாரம் பொருட்கள் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு உரிய தினத்திற்கு, உரிய அறிக்கை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டுக்கான பொருட்கள் கணக்கெடுப்புக் கோவை பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்ட போது, 2021 ஆம் ஆண்டுக்கான பொருட்கள் கணக்கெடுப்பு அறிக்கை 2022.02.20 ஆம் திகதி நிதிப் பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. எனினும், 2022 ஆம் ஆண்டுக்கான பொருட்கள் கணக்கெடுப்பு அறிக்கை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பில் இருந்து கண்டறிந்த மிகைகள், பற்றாக்குறைகள் பற்றிய பரிந்துரைகள் மற்றும் ஏனைய பரிந்துரைகள் ஆகியன உரிய காலத்திற்குள் செயற்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | தற்பொழுது குறித்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டுள்ளன. |
| பொது வாகனக் கொட்டகையில் உள்ள வாகனங்களுக்கான நாளாந்த ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகள் என்பன கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | 2021 ஆம் நிதி ஆண்டுக்கான பொது வாகனக் கொட்கையில் உள்ள வாகனங்களின் நாளாந்த ஓட்டக் குறிப்புகள் மற்றும் சுருக்க அறிக்கைகள் என்பன கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. எனினும், தற்போது பொது வாகனக் கொட்டகையில் உள்ள வாகனங்களின் நாளாந்த ஓட்டக் குறிப்புகள் மற்றும் சுருக்க அறிக்கைகள் என்பன கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. |
| அனைத்து வாகனங்களினதும் அரச சின்னங்களுக்கு நிறம் பூசப்பட்டு இருக்கவில்லை. | 2021 ஆம் நிதி ஆண்டுக்கு சகல வாகனங்களினதும் அரச சின்னங்களுக்கு நிறம் பூசப்பட்டு இருக்கவில்லை. எனினும், தற்போது சகல வாகனங்களினதும் அரச சின்னங்களுக்கு டிஜிட்டல் அச்சீட்டு வாயிலாக அச்சிடப்பட்டு வாகனங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| | |
|---|---|
| 2016.12.29 ஆம் திகதிய 2016 / 30 ஆம் இலக்கப் பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப் பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், நிறுவனத்திற்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பற்றிய எந்தவித சோதனையும் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | 2021 ஆம் நிதி ஆண்டுக்கு வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பற்றிய சோதனைகளை நடத்தும் முகமாக சகல ஆவணங்களும் தயாரிக்கப்பட்டு இருந்தன. எனினும், அந்த கால கட்டத்தினுள் நிலவிய நெருக்கடி நிலைமையின் காரணமாக எரிபொருள் நுகர்வு சோதனையை மேற்கொள்ள முடியவில்லை. எனினும், சகல வாகனங்களினதும் எரிபொருள் நுகர்வு பற்றிய சோதனையை தற்பொழுது மேற்கொள்ளத் தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| அரச ஊழியர்களின் முன்கூட்டிய பணிகளுக்கு, பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டு இருந்த மட்டுப்பாடுகள் விஞ்சியமைக்கு அணவல் அங்கீகாரம் பெறப்பட்டு இருக்கவில்லை. | மட்டுப்பாடுகள் விஞ்சப்பட்டு இருக்கவில்லை. பற்று நிலுவை மட்டுப்பாடு 20 மில்லியன் ரூபாவாக இருந்தது. நிதி ரீதியில் கடன் செலுத்தல் 4,373,912 ரூபா அளவில் இருந்தது. இடமாற்றம் பெற்று வந்த ஊழியர்களின் கடன் நிலுவைகள் குறுக்குக் குறிப்புகளின் மூலம் தீர்ப்பனவு செய்யப்பட்டன. ரூ. 20,228,815 தொகை அவ்வாறு தீர்ப்பனவு செய்யப்பட்டு இருந்தது. இதனை நிலுவை மட்டுப்பாடுகள் விஞ்சியமை தொடர்பாக ஏற்புடையதாக்கிக் கொள்ள முடியாது. |
| நிலுவையாகவுள்ள கடன் நிலுவைகளின் காலப் பகுப்பாய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | நிலுவையாக இருந்து வருகின்ற நிலுவைகள் தொடர்பான காலப் பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டுள்ளது. |
| ஒரு வருடத்திற்கும் மேலாக இருந்து வருகின்ற கடன் நிலுவைகள் அவதானிக்கப்பட்டன. | 2021 ஆம் ஆண்டுக்கான கணக்குகளில் தரப்பட்டுள்ள விபரங்களின் பிரகாரம், ஒரு வருடத்திற்கு அதிக காலம் நிலுவையாக இருந்து வருகின்ற கடன் நிலுவைகள் இருக்கவில்லை. |
| உரிய ஏற்பாடுகளுக்கு இணங்க சேகரித்த வருமானம் மீள செலுத்தப்பட்டு இருக்கவில்லை. | சேகரித்த வருமானம் உரியவாறு வருமானத் தலைப்புக்கு வரவு வைக்கப்பட்டுள்ளது. |
| வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை உரியவாறு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | 2021 ஆம் நிதி ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்திற்கு SMA / P3 / PR / 2021 ஆம் இலக்க 2022.11.10 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுப்பட்டுள்ளது.<br><br>தற்பொழுது வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை உரியவாறு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க உரிய நடவடிக்கை கமத்தொழில் அமைச்சின் மூலம் எடுக்கப்பட்டு வருகின்றது. |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla



Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| | |
|---|---|
| 2017.09.20 ஆம் திகதிய 2017 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பற்றிய சுற்றறிக்கையின் பிரகாரம் பதவியணி பற்றிய விபரங்கள், ஒரு காலாண்டு முடிவடைந்து ஒரு மாத காலத்திற்குள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு இருக்கவில்லை. | 2017.09.20 ஆம் திகதிய 2017 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பற்றிய சுற்றறிக்கையின் பிரகாரம் பதவியணி பற்றிய விபரங்கள் கோரப்பட்டிருந்த சந்தர்ப்பங்களில், குறித்த விபரங்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. தற்பொழுது, பதவியணி பற்றிய விபரங்களை பெற்றுக் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கை கமத்தொழில் அமைச்சின் மூலம் எடுக்கப்படுகின்றது. |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| இரண்டாம் பாகம்: 63.00 | |
|---|---|
| நிறுவனம் பற்றிய தேவையான தகவல்களை பொது மக்களுக்கு வழங்க ஒரு இணையத் தளம் உருவாக்கப்பட்டு பேணப்பட்டு இருக்கவில்லை. | இராஜாங்க அமைச்சு தாபிக்கப்பட்டு அது குறுகிய ஒரு காலப் பகுதியினுள் இல்லாமல் செய்யப்பட்டது. இதனால், நிறுவனம் பற்றி பொது மக்களுக்கு தேவையான தகவல்களைப் பெற்றுக் கொடுக்கும் முகமாக ஒரு இணையத் தளத்தை உருவாக்கி அதனை பேணிச் செல்லவதற்கான போதிய கால அவகாசம் இருக்கவில்லை.<br><br>எனினும் தற்போது, பொது மக்களுக்கு தேவையான தகவல்களை வழங்க அமைச்சு இணையத் தளம் ஒன்றை பேணி வருகின்றது. |
| நிறுவனத்தில் பேணப்படும் இணையத் தளத்தின் மூலம் பொது மக்களின் முறைப்பாடுகளையோ அல்லது பாராட்டுக்களையோ பதிவு செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டு இருக்கவில்லை. | இராஜாங்க அமைச்சு தாபிக்கப்பட்டு அது குறுகிய ஒரு காலப் பகுதியினுள் இல்லாமல் செய்யப்பட்டது. இதனால், நிறுவனம் பற்றி பொது மக்களுக்கு தேவையான தகவல்களைப் பெற்றுக் கொடுக்கும் முகமாக ஒரு இணையத் தளத்தை உருவாக்கி அதனை பேணிச் செல்லவதற்கான போதிய கால அவகாசம் இருக்கவில்லை.<br><br>எனினும் தற்போது, அமைச்சின் இணையத் தளத்தின் மூலம் பொதுமக்களுக்கு முறைப்பாடுகளை அல்லது பாராட்டுகளைப் பதிவு செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. |
| நிறுவனத்தின் பிரஜைகள் / வாடிக்கையாளர் சாசனம் செயற்படுத்தப்படுவது பற்றி கண்காணிப்பதற்கும் மற்றும் மதிப்பிடுவதற்கும் நிறுவனத்தினால் ஒரு முறையியல் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | இராஜாங்க அமைச்சு தாபிக்கப்பட்டு அது குறுகிய ஒரு காலப் பகுதியினுள் இல்லாமல் செய்யப்பட்டது. இதனால், 2021 ஆம் நிதி ஆண்டுக்கான பிரஜைகள் / வாடிக்கையாளர் சாசனத்தை உரியவாறு தயாரித்து செயற்படுத்த போதிய கால அவகாசம் இருக்கவில்லை.<br><br>எனினும் தற்போது, பிரஜைகள் / வாடிக்கையாளர் சாசனத்தை முறையாக தயாரித்து செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| | |
|---|---|
| 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் திகதிய 02 / 2018 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் முறையாக தயாரிக்கப்படும் ஒரு மனித வளத் திட்டம் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | இராஜாங்க அமைச்சு தாபிக்கப்பட்டு அது குறுகிய ஒரு காலப் பகுதியினுள் இல்லாமல் செய்யப்பட்டது. இதனால், 2021 ஆம் நிதி ஆண்டுக்கான மனித வளத் திட்டத்தைத் தயாரிக்க முடியவில்லை. எனினும், தற்பொழுது அந்த மனித வளத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| தயாரிக்கப்பட்ட மனிதவளத் திட்டத்தின் மூலம் பதவியணியில் 50% வீதத்திற்கும் அதிகமான ஊழியர்களுக்கு வருடத்திற்கு குறைந்தபட்சம் 12 மணித்தியால பயிற்சி வாய்ப்பு உறுதிப் படுத்தப் பட்டு இருக்கவில்லை. | இராஜாங்க அமைச்சு தாபிக்கப்பட்டு அது குறுகிய ஒரு காலப் பகுதியினுள் இல்லாமல் செய்யப்பட்டது. இதனால், 2021 ஆம் நிதி ஆண்டுக்கு தயாரித்த மனித வளத் திட்டத்தின் மூலம் பதவியணியில் நூற்றுக்கு 50 வீதத்திற்கும் அதிகமான ஊழியர்களுக்கு வருடம் ஒன்றுக்கு ஆகக்குறைந்தது 12 மணித்தியாலத்திற்கு குறையாத பயிற்சி வாய்ப்பை உறுதி செய்வதற்கு போதிய கால அவகசாம் இருக்கவில்லை.<br><br>மட்டுப்படுத்திய நிதி ஒதுக்கீடு காரணமாக, குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர்களுக்கு பயிற்சி வாய்ப்புகளை வழங்க முடிந்தது.<br><br>2023 ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில், இலங்கை மன்றம் நடத்திய பயிற்சி வேலையரங்குகளில் கிட்டத்தட்ட 80 உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். கிட்டத்தட்ட 32 மணித்தியால பயிற்சி வேலையரங்கு வாய்ப்புகள் கிடைத்தன. |
| அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கிய செயலாற்றுகை சார்ந்த ஒப்பந்தங்கள் தயாரிக்கப்பட்டு அத்தகைய ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | இராஜாங்க அமைச்சு தாபிக்கப்பட்டு அது குறுகிய ஒரு காலப் பகுதியினுள் இல்லாமல் செய்யப்பட்டது. இதனால், 2021 ஆம் நிதி ஆண்டுக்கு ஒட்டுமொத்த பதவியணியையும் உள்ளடக்கிய செயலாற்றுகை சாந்த ஒப்பந்தங்களை செய்து கொள்வதற்கு போதிய கால அவகாசம் இருக்கவில்லை.<br><br>எனினும், தற்போது ஒட்டுமொத்தப் பதவியணியையும் உள்ளடக்கிய செயலாற்றுகை சார்ந்த ஒப்பந்தங்களை தயாரித்து அத்தகைய ஒப்பந்தங்களை செய்து கொள்வதற்கான ஒழுங்குகளை கமத்தொழில் அமைச்சு மேற்கொண்டு வருகின்றது. |

L.H.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| | |
|---|---|
| மனித வள அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கும் ஆற்றல் மற்றும் திறன் அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துவதற்கும் நிறுவனத்தில் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் பெயர்குறித்து நியமிக்கப்பட்டு இருக்கவில்லை. | இராஜாங்க அமைச்சு தாபிக்கப்பட்டு அது குறுகிய ஒரு காலப் பகுதியினுள் இல்லாமல் செய்யப்பட்டது. இதனால், 2021 நிதி ஆண்டுக்கான மனித வளத் திட்டத்தை தயாரிப்பதற்கும், ஆற்றல் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்கும் நிறுவனத்தில் சிரேஷ்ட அதிகாரி ஒருவரை பெயர்குறித்து முறையாக நியமிப்பதற்கு போதிய கால அவகாசம் இருக்கவில்லை.<br><br>எனினும், தற்போது சிரேஷ்ட உதவி செயலாளர் (கட்டுப்பாடு) ஒருவர் குறித்த பணிக்கு பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளார். |
| திட்டமிடப்பட்டு இருந்த பயிற்சி வாய்ப்புகளில் வழங்கப்பட்டு இருந்த பயிற்சி வாய்ப்புகளின் எண்ணிக்கை 50% வீதத்திற்கும் குறைவாகவே இருந்திருந்தது. | இராஜாங்க அமைச்சு தாபிக்கப்பட்டு அது குறுகிய ஒரு காலப் பகுதியினுள் இல்லாமல் செய்யப்பட்டது. இதனால், 2021 ஆம் நிதி ஆண்டுக்கு திட்டமிடப்பட்டு இருந்த பயிற்சி வாய்ப்புகளில் இருந்து வழங்கி இருந்த பயிற்சிக்கான சந்தர்ப்பங்களை பயன்படுத்திக் கொள்ள போதிய கால அவகாசம் இருக்கவில்லை.<br><br>மேலும், 2023 ஆம் ஆண்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான நிதிகள் ஒதுக்கீடு செய்யப்படாத நிலையில், அந்த ஆண்டின் இறுதியில், கிட்டத்தட்ட 5 இலட்சம் ரூபாஅளவான நிதி ஒதுக்கப்பட்டு இருந்தது. |
| நிறுவனத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம் முனைப்பழியற்றதாக அல்லது பாதகமானதாக இருந்திருந்தது. | 2021 ஆம் ஆண்டு திசம்பர் மாதத்திற்கான நிதிக் கூற்றின் பிரகாரம், முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகையால், முனைப்பழியற்ற அல்லது பாதகமான கணக்காய்வு அபிப்பிராயம் எதுவும் வெளியிடப்பட்டிருக்கவில்லை. |
| அனைத்து ஊழியர்களும் சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் கூற்றுக்களை சமர்ப்பித்து இருக்கவில்லை. | கோவிட் தொற்றுநோய் நிலவியதன் காரணமாக, சில உத்தியோகத்தர்கள் சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகை ஆவணங்களை சமர்ப்பிக்கவில்லை. எனினும், 2022 ஆம் ஆண்டு முதல், அந்த செத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகை ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டிய உத்தியோகத்தர்களிடம் இருந்து அவற்றை உரிய முறையில் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| | |
|---|---|
| அதிகபட்ச சேவை காலத்தை நிறைவு செய்த உத்தியோகத்தர்களை முறையாக இடமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | இராஜாங்க அமைச்சு 2020 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. அதிகபட்ச சேவை காலத்தை நிறைவு செய்த உத்தியோகத்தர்கள் இருக்கவில்லை. |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| **கால்நடை வளங்கள், பண்ணைகள் ஊக்குவிப்பு மற்றும் பால் மற்றும் முட்டை மைய கைத்தொழில் இராஜாங்க அமைச்சு முதலாம் பாகம்: 87.00** | |
|---|---|
| குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள் / குழுவால் வழங்கப்பட்ட உத்தரவுகள் | குழுவால் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்ய / வழங்கப்பட்ட பரிந்துரைகளை செயற்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை |
| கணக்காய்வாளர் வினவி இருந்த ஒவ்வொரு கணக்காய்வு வினாவுக்கும் ஒரு மாதத்திற்குள் பதில் வழங்கப்பட்டு இருக்கவில்லை. | முடியுமான எல்லா சந்தர்ப்பங்களிலும், கணக்காய்வு வினாக்களுக்கு உடனடியாக பதில் அளிக்கப்பட்டுள்ளது. அது பற்றி சகல உத்தியோகத்தர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| நி. பி. கு. இலக்கம் 134 (3) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | கணக்காய்வாளர் நாயகம் வினவிய கணக்காய்வு வினாக்களுக்கான கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் முறையாக கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். |
| 2017.06.26 ஆம் திகதிய 1 / 2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவம் பற்றிய சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம், 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் அகற்றப்பட்ட சொத்துக்கள் பற்றிய விபரங்கள் கட்டுப்பாட்டாளர் அதிபதியின் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | கால்நடை வளங்கள், பண்ணைகள் ஊக்குவிப்பு மற்றும் பால் மற்றும் முட்டை மைய கைத்தொழில் இராஜாங்க அமைச்சு 2021 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டதையடுத்து அந்தந்த ஆண்டுகளுக்கு கொள்வனவு செய்த மற்றும் அகற்றிய சொத்துக்களின் விபரங்கள் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.

Janaka Dharmakeerthi,
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| | |
|---|---|
| அனைத்து வாகனங்களுக்கும் உரிமைப் பத்திரங்களை உறுதிப் படுத்துகின்ற ஆவணங்கள் இருந்திருக்கவில்லை. | கால்நடை வளங்கள் பிரிவின் கீழ் தற்பொழுது காணப்படுகின்ற அனைத்து வாகனங்களினதும் பதிவு உரிமை கால்நடை வளங்கள், பண்ணைகள் ஊக்குவிப்பு மற்றும் பால் மற்றும் முட்டை மைய கைத்தொழில் இராஜாங்க அமைச்சு, கால்நடை வளங்கள் இராஜாங்க அமைச்சு மற்றும் கமத்தொழில் அமைச்சு ஆகிய அமைச்சுக்களின் பெயரில் உள்ளன. அந்த வாகனங்களின் உரிமையை உறுதிப் படுத்துகின்ற வாகனங்களினது பதிவு சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் வாகனப் போக்குவரத்துப் பிரிவில் உள்ளன. |
| வாகனங்கள் பாவனைக்கு ஒவ்வாத நிலைக்கு மாறிய பின்னர், 08 மாதங்களுக்கு குறைந்த ஒரு காலப் பகுதியில் அந்த வாகனங்கள் அகற்றப்பட்டு இருக்கவில்லை. | 1. JR - 2899 ஆம் இலக்க கெப் வண்டி இந்த அமைச்சின் கீழ் இயங்கும் விவசாயத் திணைக்களத்திடம் அது கோரியவாறு (விவசாயத் திணைக்களத்தின் கீழ் உள்ள விதை மற்றும் நடுகை மூலப்பொருள் அபிவிருத்தி நிலையத்தின் பாவனைக்காக) முறையாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.<br><br>2. 65 - 6120 ஆம் இலக்க டிபென்டர் வகை ஜீப் பவண்டி பொலிஸ் மாஅதிபரினதும் மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினதும் வேண்டுகோளுக்கு இணங்க, பொலிஸ் திணைக்களத்தின் கீழ் இயங்குகின்ற விஷேட அதிரடிப் படைக்கு இணைக்கக் கூடிய விதத்தில் உரிய முறையில் பொலிஸ் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.<br><br>3. 251 - 0747 ஆம் இலக்க வேன் வண்டி நி. பி. கு. இலக்கம் 770 (4) (அ) இன் பிரகாரம் அகற்ற வேண்டிய வாகனங்களை கண்டறியும் பொருட்டு நியமித்த விஷேட மதிப்பாய்வு குழுவின் பரிந்துரைக்கு இணங்க, பழுதுபார்க்கும் முகமாக அனுப்பப்பட்டுள்ளது. |
| நி. பி. கு. இலக்கம் 94 (1) இன் பிரகாரம், ஒரு செலவின தலைப்புக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்திய பின்னர், எஞ்சிய நிதி ஒதுக்கீட்டு வரையறை, அனுமதித்து இருந்த வரையறைகளை விஞ்சி பொறுப்புக்களை சுமத்தி இருந்தது. | கால்நடை வளங்கள், பண்ணைகள் ஊக்குவிப்பு மற்றும் பால் மற்றும் முட்டை மைய கைத்தொழில் இராஜாங்க அமைச்சு 2021 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டதையடுத்து, இன்று வரை செலவினத் தலைப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த நிதி, உரிய வரையறையை விஞ்சி செலவு செய்யப்படவில்லை. எனினும், அத்தியவாசிய நிலைமைகளில் பொறுப்புக்களை ஏற்படுத்திக் கொள்ள நேர்ந்துள்ளது. |
| ஒரு வருடத்திற்கும் மேலாக இருந்து வருகின்ற கடன் நிலுவைகள் அவதானிக்கப்பட்டன. | ஒரு வருட காலத்திற்கும் மேலாக இருந்து வருகின்ற கடன் நிலுவைகளின் மொத்தம் ரூ. 316,991.49 தொகையாக இருந்தது. உரிய கடன் நிலுவைகளை அறவிடுவதற்கு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| இரண்டாம் பாகம்: 67.00 | |
|---|---|
| பிரஜைகள் / வாடிக்கையாளர் சாசனம் உரிய முறையில் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | பொது மக்களுடன் நேரடியான தொடர்பு இல்லாத காரணத்தினாலும், கமத்தொழில் அமைச்சின் கட்டிடி வளாகத்தினுள்ளே அன்று இருந்த இராஜ அமைச்சை நிருவகித்து செல்ல வேண்டி இருந்த காரணத்தினாலும், அமைச்சின் பிரஜைகள் / வாடிக்கையாளர் சாசனம் தயாரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டு இருந்த காரணத்தினாலும் 2021 ஆம் நிதி ஆண்டுக்கான பிரஜைகள் / வாடிக்கையாளர் சாசனத்தை தனியாக தயாரிக்க வேண்டிய ஒரு தேவை ஏற்பட்டிருக்கவில்லை.<br><br>எனினும், தற்பொழுது கால்நடை வளங்கள் பிரிவு, கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கீழ் தனியான ஒரு பிரிவாக இயங்குவதால் கால்நடை வளங்கள் பிரிவுக்கு தனியான ஒரு பிரஜைகள் / வாடிக்கையாளர் சாசனத்தை தயாரிப்பதற்கு உரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மேலும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். |
| நிறுவனத்தின் பிரஜைகள் / வாடிக்கையாளர் சாசனம் செயற்படுத்தப்படுவது பற்றி கண்காணிப்பதற்கும் மற்றும் மதிப்பிடுவதற்கும் நிறுவனத்தினால் ஒரு முறையியல் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டுக்கான பிரஜைகள் / வாடிக்கையாளர் சாசனம் தனியாக தயாரிக்கப்பட்டு இருக்காததால் அதனை செயற்படுத்துவது பற்றிய கண்காணிப்புக்கும் மற்றும் மதிப்பீட்டுக்குமான ஒரு முறையியலின் தேவை எழவில்லை.<br><br>எனினும், தற்பொழுது இந்த பிரஜைகள் / வாடிக்கையாளர் சாசனத்தை உரிய முறையில் தயாரித்து செயற்படுத்துவதற்கு உரிய ஒழுங்குகள் கமத்தொழில் அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| உள்ளகக் கணக்காய்வு வினாக்களுக்கு ஒரு மாத காலத்திற்குள் பதிலளிக்கப்பட்டு இருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு வினவல்களுக்கு பதில்களை வழங்கும் போது, தரப்பட்டுள்ள காலப் பகுதியினுள் அத்தகைய பதில்கள் அனுப்பப்படுகின்றன.<br><br>இருப்பினும் கால்நடைகள் ஆய்வு நிலையம் போன்ற பிராந்திய அலுவலகங்களில் இருந்து தகவல்கள் அழைக்கப்பட்டு பதில்கள் தயாரிக்கப்படும் சந்தர்ப்பங்களில் தாமதம் ஏற்படுவதால், அவ்வாறான சந்தர்ப்பங்களில் காணப்படுகின்ற நிலைமை பற்றி அறிவித்து இடைக்கால பதில்களை அனுப்பவும், மேலதிக கால அவகாசத்தை கோரி பதில்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>மேலும், இவ்வாறான நிலைமைகளை குறைக்கும் முகமாக, மின்னஞ்சல் மூலம் தொடர்புடைய அறிக்கைகளை பெற கூகுள் தாள் போன்ற மின் படிவங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. |
| அனைத்து வாகனங்களினதும் அரச சின்னங்களுக்கு நிறம் பூசப்பட்டு இருக்கவில்லை. | திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்களில் பெரும்பாலான வாகனங்களுக்கான அரச இலட்சினைகள் நிறம் பூசப்பட்டுள்ளன. ஏனைய வாகனங்களுக்கு அச்சீட்டு ஸ்டிக்கர்களாக அல்லது அரச இலட்சினைகளாக அவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.<br><br>எவ்வாறாயினும் சகல வாகனங்களுக்கும் உரிய அரச இலட்சினைகளுக்கு நிறம் பூசுவதற்கு தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.



Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| | |
|---|---|
| வாகனங்கள் பாவனைக்கு ஒவ்வாததாக மாறிய பின்னர் 8 மாதங்களுக்கு குறையாத ஒரு காலப் பகுதியினுள் அந்த வாகனங்கள் அகற்றப்பட்டு இருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் பாவனைக்கு ஒவ்வாததாக இருந்த வாகனங்களை அகற்றும் பணிகள் 2022 ஆம் ஆண்டினுள் நிறைவு செய்யப்பட்டன. இதன் பின்னரும் அகற்ற வேண்டிய வாகனங்களை 02 / 2015 ஆம் இலக்கப் பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| 2016.12.29 ஆம் திகதிய 2016 / 30 ஆம் இலக்கப் பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப் பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், நிறுவனத்திற்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பற்றிய எந்தவித சோதனையும் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | 2021 ஆம் மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் ஆரம்ப காலப் பகுதியினுள் நாட்டில் நிலவிய தொற்றுநோய் நிலவரமும் மற்றும் எரிபொருள் நெருக்கடி நிலையும் ஏற்பட்டிருந்ததால் வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பற்றிய சோதனைகளை நடத்தும் பணிகள் தாமதமடைந்தன. எனினும், அந்தப் பணிகள் தற்போது இயல்புநிலைக்கு திரும்பியுள்ளன. |
| நி. பி. கு. இலக்கம் 94 (1) இன் பிரகாரம், ஒரு செலவின தலைப்புக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்திய பின்னர், எஞ்சிய நிதி ஒதுக்கீட்டு வரையறை, அனுமதித்து இருந்த வரையறைகளை விஞ்சி பொறுப்புக்களை சுமத்தி இருந்தது. | மின்சாரம் மற்றும் தண்ணீர் போன்ற கட்டாய பயன்பாட்டு சேவைகளுக்கு அறவிடப்படும் கட்டணத்தை அதிகரித்தல் மற்றும் வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடு போதுமானதாக இல்லாதிருந்தமை போன்ற நிலைமைகளில் இவ்வாறான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டு இருந்தன.<br><br>அந்த பயன்பாட்டு சேவைகளின் பயன்பாட்டை முகாமை செய்வதன் மூலம் அத்தகைய நிலைமைகளை எதிர்காலத்தில் கட்டுப்படுத்த தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. |
| உரிய காலம் தாண்டியும் ஏனைய நிறுவனங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டு இருந்தது. | 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அச்சிடும் பணிகளின் நிமித்தம், அரசாங்க அச்சகத் திணைக்களத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டு இருந்தது. அந்த ஒவ்வொரு நிதி ஒதுக்கீடும் உரிய காலப் பகுதியினுள் அந்தத் திணைக்களத்திற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| இரண்டாம் பாகம்: 79.00 | |
|---|---|
| நிறுவனத்தில் பேணப்படும் இணையத் தளத்தின் மூலம் பொதுமக்களின் முறைப்பாடுகளையோ அல்லது பாராட்டுக்களையோ பதிவு செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டு இருக்கவில்லை. | தற்போது திணைக்களத்தினால் பேணப்பட்டு வருகின்ற இணையத் தளத்தில் பொது மக்கள் முறைப்பாடுகளையோ, பாராட்டுக்களையோ பதிவு செய்ய சந்தர்ப்பம் இல்லையென்றாலும், புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இணையத் தளத்தில் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. புதிய இணையத் தளம் விரைவில் ஆரம்பிக்கப்படும். |
| நிறுவனத்தின் பிரஜைகள் / வாடிக்கையாளர் சாசனம் செயற்படுத்தப்படுவது பற்றி கண்காணிப்பதற்கும் மற்றும் மதிப்பிடுவதற்கும் நிறுவனத்தினால் ஒரு முறையியல் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | பிரஜைகள் / வாடிக்கையாளர் சாசனம் திணைக்களத்தின் இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், பொது மக்களுக்கு சேவை வழங்கும் போது ஏற்படும் பிரச்சினைகள் பற்றி தெரிவிக்க, வரவேற்பு பீடத்திற்கு அருகில் பொது மக்கள் தமது முறைப்பாடுகளை இடுவதற்கு என தனியான ஒரு பெட்டி வைக்கப்பட்டுள்ளது. அதில் முறைப்பாடுகள் இடப்பட்டுள்ளனவா என வாரந்தோறும் பரிசீலிக்கப்படுகின்றது. அதில் பொது மக்கள் முறைப்பாடுகளை இட்டிருந்தால், அவை பற்றி ஆராய்ந்து கண்காணிப்பதற்கு ஒரு முறையியல் தாபிக்கப்பட்டுள்ளது. |
| அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கிய செயலாற்றுகை சார்ந்த ஒப்பந்தங்கள் தயாரிக்கப்பட்டு அத்தகைய ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | செயலாற்றுகையை மதிப்பிடுவது தொடர்பாக திணைக்களம் ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது. அந்த சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| | |
|---|---|
| திட்டமிடப்பட்டு இருந்த பயிற்சி வாய்ப்புகளில் வழங்கப்பட்டு இருந்த பயிற்சி வாய்ப்புகளின் எண்ணிக்கை 50% வீதத்திற்கும் குறைவாகவே இருந்திருந்தது. | 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வழமையாக அலுவலகங்கள் 06 மாதங்களுக்கு மட்டுமே இயங்கின. கோவிட் தொற்றுநோய் காரணமாக, ஊழியர்களை பணிக்கு அழைப்பதற்கான கட்டுப்பாடு விதிக்கப்பட்டமை மற்றும் சுழற்சி முறையில் ஊழியர்கள் பணிக்கு அழைக்கப்பட்டமை ஆகிய காரணங்களினால் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் நிமித்தம் உத்தியோகத்தர்களை ஒருங்கிணைப்பது கடினமாக இருந்தது. இதனால் இந்த நிலை ஏற்பட்டது. திட்டமிடப்பட்டு இருந்த சகல பியற்சி வாய்ப்புகளும் தற்பொழுது 100% வீதம் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. |
| நிறுவனத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம் முனைப்பழியற்றதாக அல்லது பாதகமானதாக இருந்திருந்தது. | 2021 ஆம் ஆண்டு தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயம் முனைப்பழியற்ற அல்லது பாதகமற்ற அபிப்பிராயம் என, தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கேடீஏ / சி / ஏஏபிஎச் / ஏ / 2021 /81 ஆம் இலக்க 2022.05.31 ஆம் திகதிய கணக்காய்வாளரின் கணக்காய்வு சுருக்க அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்<br>முதலாம் பாகம்: 89.00 | |
|---|---|
| குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள் / குழுவால் வழங்கப்பட்ட உத்தரவுகள் | குழுவால் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்ய / வழங்கப்பட்ட பரிந்துரைகளை செயற்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை |
| அனைத்து வாகனங்களுக்கும் உரிமைப் பத்திரங்களை உறுதிப் படுத்துகின்ற ஆவணங்கள் இருந்திருக்கவில்லை. | திணைக்களத்தில் உள்ள வாகனங்களில் 03 கெப் வண்டிகள் தவிர, எஞ்சிய எல்லா வாகனங்களினதும் உரிமை திணைக்களத்திற்கு மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளது. உரிமை மாற்றிக் கொடுக்கப்படாதுள்ள வாகனங்களின் உரிமையை திணைக்களத்திற்கு மாற்றிப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| வாகனங்கள் பாவனைக்கு ஒவ்வாத நிலைக்கு மாறிய பின்னர், 08 மாதங்களுக்கு குறைந்த ஒரு காலப் பகுதியில் அந்த வாகனங்கள் அகற்றப்பட்டு இருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் கொரோனா தொற்றுநோய் அவ்வப் பொழுது நாட்டினுள் பரவியதால் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமை மற்றும் சுகாதார வழிகாட்டல்களுக்கு இணங்க செயற்படுவதற்கு நேர்ந்தமை ஆகிய காரணங்களினால் அவ்வப் பொழுது மட்டுப்பட்டளவில் ஊழியர்களை அலுவலகத்திற்கு வரவழைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதால் மோட்டார் வாகனப் பதிவுத் திணைக்களத்தின் அனுமதியை பெறுவது தாமதித்தது. தற்பொழுது இந்த வாகனங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| அரச வாகன விபத்துக்கள் தொடர்பாக, நி. பி. கு. இலக்கம் 103, 104, 109 மற்றும் 110 ஆகியவற்றின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | அரச வாகன விபத்துக்கள் தொடர்பாக, நி. பி. கு. இலக்கம் 103, 104, 109 மற்றும் 110 ஆகியவற்றின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதில் தாமதம் ஏற்பட்டது. தற்பொழுது அந்த தாமதித்த கரும பணிகள் தொடர்பான விடயங்கள் நிறைவு செய்யப்பட்டு வருகின்றன. |
| 2016.12.29 ஆம் திகதிய 2016 / 30 ஆம் இலக்கப் பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப் பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நிறுவனத்திற்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பற்றிய சோதனை எதுவும் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பற்றிய சோதனையை மேற்கொள்ள முயடிவில்லை. 2021 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கொரோனா தொற்றுநோய் நிலவியமையால் அலுவலகத்தை அடிக்கடி மூடவேண்டிய நிலை ஏற்பட்டமை, ஊழியர்கள் அலுவலகத்திற்கு அழைக்கப்படுதல் மட்டுப்படுத்தப்பட்டமை இந்த சோதனையை மேற்கொள்ள முடியாது போனமைக்கான காரணங்களாகும். மேலும் ஊழியர்கள் வேலைக்கு அறிக்கையிடுவது விட்டுவிட்டு நிகழ்ந்ததால் எரிபொருள் நுகர்வு பற்றிய இந்த சோதனையை மேற்கொள்வதற்கு தாமதமாகியது. இதன் காரணமாக குறித்த ஆண்டு காலப் பகுதியில் குறித்த எரிபொருள் நுகர்வு பற்றிய சோதனையை மேற்கொள்ள முடியாது போனது. |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.



Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| | |
|---|---|
| நி. பி. கு. இலக்கம் 94 (1) இன் பிரகாரம், ஒரு செலவின தலைப்புக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்திய பின்னர், எஞ்சிய நிதி ஒதுக்கீட்டு வரையறை, அனுமதித்து இருந்த வரையறைகளை விஞ்சி பொறுப்புக்களை சுமத்தி இருந்தது. | இது, நி. பி. கு. இலக்கம் 94 (1) இன் பிரகாரம் ஒரு பொறுப்பல்ல. மேலும், நி. பி. கு. இலக்கம் 94 (2) இன் பிரகாரம், நிதி ஒதுக்கீட்டு மட்டுப்பாட்டை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்படவில்லை. எவ்வாறாயினும், எஞ்சியுள்ள நிதி ஒதுக்கீட்டின் மட்டுப்பாட்டை விஞ்சி பொறுப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கக் கூடாது என உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| உரிய காலப் பகுதியை தாண்டி நிதிகள் ஏனைய நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டு இருடிருந்தன. | உரிய காலம் கழிந்து ஏனைய நிறுவனங்களுக்கு நிதியை ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| ஒரு வருடத்திற்கும் மேலாக இருந்து வருகின்ற கடன் நிலுவைகள் அவதானிக்கப்பட்டன. | 2021.12.31 ஆம் திகதிற்கு இரண்டு உத்தியோகத்தர்களின் கடன்கள் நிலுவையாக உள்ளன. இவற்றில் ஒரு கடன் நிலுவைத் தொகை தொடர்பான நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. எஞ்சிய கடன் நிலுவை தொடர்பாக சட்ட நடவடிக்கையை எடுக்க சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு குறித்த விடயம் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளது. |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| இரண்டாம் பாகம்: 99.00 | |
|---|---|
| திட்டமிடப்பட்டு இருந்த பயிற்சி வாய்ப்புகளில் வழங்கப்பட்டு இருந்த பயிற்சி வாய்ப்புகளின் எண்ணிக்கை 50% வீதத்திற்கும் குறைவாகவே இருந்திருந்தது. | 2021 ஆம் ஆண்டில் கொரோனா தொற்று அவ்வப் பொழு நாட்டில் பரவியதன் காரணமாக பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமை மற்றும் சுகாதார வழிகாட்டல்களுக்கு இணங்க செயல்படுவதற்கு நேர்ந்தமை என்பவற்றின் காரணமாக குழுவாக ஊழியர்களை ஒன்றுதிரட்டி பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவது மட்டுப்படுத்தப்பட்டது. எனினும் 2021 ஆம் ஆண்டு ஊழியர்களின் பயிற்சிக்காக ஒதுக்கப்பட்டு இருந்த நிதிகளில் 70% வீதமான நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது. |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| ஏற்றுமதிகள் விவசாயத் திணைக்களம்<br>முதலாம் பாகம்: 92.00 | |
|---|---|
| குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள் / குழுவால் வழங்கப்பட்ட உத்தரவுகள் | குழுவால் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்ய / வழங்கப்பட்ட பரிந்துரைகளை செயற்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை |
| 2004.05.11 ஆம் திகதிய பொதுக் கணக்குகள் பற்றிய 171 / 2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், அரச ஊழியர்களின் சம்பளங்களை செயலாக்கம் செய்யும் கணனி மென்பாகத்திற்கான முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது கடவுச்சொற்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை மாற்றப்பட்டு இருக்கவில்லை. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இந்த ஆண்டு முதல் அரச சம்பளம் தயாரித்தல் கணனி மென்பாகம் தொடர்பான முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது கடவுச்சொற்களை மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். |
| அனைத்து வாகனங்களுக்கும் உரிமைப் பத்திரங்கள் உறுதிப் படுத்துகின்ற ஆவணங்கள் இருக்கவில்லை. | சகல வாகனங்களினதும் உரிமையை உறுதிப் படுத்துகின்ற ஆவணங்கள் உள்ளன. |
| அனைத்து வாகனங்களினதும் அரச சின்னங்களுக்கு நிறம் பூசப்பட்டு இருக்கவில்லை. | சகல வாகனங்களுக்கும் உரிய அரச இலட்சினைகளுக்கு நிறம் பூசுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| வாகனங்கள் பாவனைக்கு ஒவ்வாத நிலைக்கு மாறிய பின்னர் 08 மாதங்களுக்கு குறைந்த ஒரு காலப் பகுதியில் அந்த வாகனங்கள் அகற்றப்பட்டு இருக்கவில்லை. | வாகனங்களை அகற்றும் முகமாக 02 / 2015 ஆம் இலக்கப் பொது நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நியமிக்கப்பட்ட குழுவுக்கு தகவல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| | |
|---|---|
| 2016.12.29 ஆம் திகதிய 2016 / 30 ஆம் இலக்கப் பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப் பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், நிறுவனத்திற்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பற்றிய எந்தவித சோதனையும் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டு கோவிட் (COVID) தொற்றுநோய் நிலைமையில் அரசாங்கம் எரிபொருள் பாவனையை மட்டுப்படுத்திய காரணத்தினாலும் மற்றும் QR குறியீட்டு முறையில் எரிபொருள் விநியோகிக்கப்பட்டமையினாலும் இந்த எரிபொருள் பரிசோதனையை மேற்கொள்ள முடியவில்லை. இந்த ஆண்டு காலப் பகுதியினுள் குறித்த எரிபொருள் பரிசோதனையை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். |
| ஒரு வருடத்திற்கு மேலாக இருந்து வருகின்ற கடன் நிலுவைகள் அவதானிக்கப்பட்டன. | திரு டப்ளியூ. எம். ஹேரத் நிஷங்க அவர்களின் கடனையும் மற்றும் திரு ஜி. டீ. ஜயவர்த்தன அவர்களின் கடனையும் அறவிடுவது தொடர்பாக ஏற்கனவே சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| அனுமதிக்கப்பட்டுள்ள வரையறையை விஞ்சி ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு இருந்தது. | திரு எல். ஜி. வசந்த, திரு ஜி. ஏ. எல். பிரான்ஸிஸ், திரு பி. ஏ. எல். சுந்தரலிங்கம் ஆகியோர் தற்பொழுது 60 வயது பூர்த்தியின் பேரில் ஓய்வுபெற்று சென்றுள்ளனர். இவர்கள் 45 வயதின் பின்னர் அரச சேவையில் இணைந்த காரணத்தினால் இவர்களின் ஓய்வூதியம் இவர்களுக்கு செலுத்தப்பட்டு இருக்கவில்லை. தற்பொழுது இவர்களின் ஓய்வூதிய சம்பளத்தை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதன் பின்னர், குறித்த கடன்களை இவர்களின் பணிக்கொடைகளில் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.



Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| இரண்டாம் பாகம்: 61.00 | |
|---|---|
| 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் திகதிய 02 / 2018 ஆம் இலக்கப் பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் முறையாக தயாரிக்கப்படும் ஒரு மனித வளத் திட்டம் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிற்குரிய இந்தத் திணைக்களத்தின் மனித வள அபிவிருத் திட்டத்தை தயாரிப்பது தொடர்பான பூர்வாங்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்படு இருந்தன. எனினும், நாட்டில் ஏற்பட்டுள்ள கோவிட் தொற்றுநோய் நிலைமை காரணமாக, அவ்வப்போது விதிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் மற்றும் கடுமையான பயணக் கட்டுப்பாடுகள் என்பவற்றினால் இந்த ஆண்டு இறுதி வரை அதனை செய்து முடிக்க முடியவில்லை. எனினும், குறித்த மனித வள அபிவிருத்தித் திட்டம் 2022 ஆம் ஆண்டு முதல் தயாரிக்கப்பட்டுள்ளது. |
| தயாரிக்கப்பட்ட மனித வளத் திட்டத்தின் மூலம் பதவியணியில் 50% வீதத்திற்கும் அதிகமான ஊழியர்களுக்கு வருடத்திற்கு குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி வாய்ப்பு உறுதிப்படுத்தப் பட்டு இருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டு நாட்டில் நிலவிய கோவிட் (COVID) தொற்றுநோய் காரணமாக பயிற்சி வாய்ப்புகளின் நிமித்தம ஊழியர்களை பயிற்சிகளுக்கு அனுப்ப முடியவில்லை. எனினும், 2022 ஆம் ஆண்டில் உரியவாறு ஊழியர்கள் குறித்த பயிற்சிகளுக்கு அனுப்பப்பட்டனர். |
| அனைத்து ஊழியர்களையும் உள்ளடக்கிய செயலாற்றுகை ஒப்பந்தங்கள் தயாரிக்கப்பட்டு அத்தயை ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | தகவுடைய அதிகாரிகள் மற்றும் பதவியணி சாராத அதிகாரிகள் ஆகியோருக்காக செய்து கொள்ள வேண்டிய வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தங்கள் தயாரிக்கப்பட்டு இருந்தன. எனினும், ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்ட நேரத்தில் பிரச்சினைக்குரிய நிலைமைகளுக்கு முகம்கொடுக்க நேர்ந்தது. குறித்த ஆண்டு முடிவடையும் வரை முழுமையாக அவ்வாறு ஒப்பந்தங்களை செய்து கொள்ள முடியவில்லை. 2022 ஆம் ஆண்டில் உரியவாறு செயலாற்றுகை சார்ந்த ஒப்பந்தங்கள் தயாரிக்கப்பட்டு அத்தகைய ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன. |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| | |
|---|---|
| மனித வள அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கும், ஆற்றல் மற்றும் திறன் அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துவதற்கும் நிறுவனத்தில் எந்த ஒரு சிரேஷ்ட அதிகாரியும் பெயர்குறித்து நியமிக்கப்பட்டு இருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் 02 / 2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 6.5 ஆம் பிரிவின் பிரகாரம் மனித வள அபிவிருத் திட்டங்களை தயாரிப்பதற்கும், ஆற்றல் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்கும் உரிய பொறுப்பு திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியான மேலதிகப் பணிப்பாளர் (நிருவாகம்) நாயகத்திற்கு ஒப்படைக்கப்பட்டு இருந்தது. அந்த அதிகாரி ஓய்வுபெற்று சென்ற பின்னர் குறித்த பொறுப்பு உதவிப் பணிப்பாளருக்கு (நிருவாகம்) ஒப்படைக்கப்பட்டுள்ளது. |
| திட்டமிடப்பட்டு இருந்த பயிற்சி வாய்ப்புகளில் வழங்கப்பட்டு இருந்த பயிற்சி வாய்ப்புகளின் எண்ணிக்கை 50% வீதத்திற்கும் குறைவாகவே இருந்திருந்தது. | 2021 ஆம் ஆண்டு நாட்டில் நிலவிய கோவிட் (COVID) தொற்றுநோயின் காரணமாக அந்த கால கட்டத்தில் நடைமுறையில் இருந்த சுகாதார வழிகாட்டல்களுக்கு இணங்க பயிற்சி வாய்ப்புகளின் நிமித்தம் ஊழியர்களை பயிற்சிக்காக அனுப்ப முடியவில்லை. எனினும் 2022 ஆம் ஆண்டில் உரியவாறு ஊழியர்கள் பயிற்சிக்காக அனுப்பப்பட்டனர். |
| நிறுவனத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம் முனைப்பழியற்றதாக அல்லது பாதகமாக இருந்திருந்தது. | கடந்த ஆண்டுகளின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முனைப்பழியற்ற அல்லது பாதகமான கணக்காய்வு அபிப்பிராயம் எதுவும் கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியிடப்படவில்லை. |
| அதிகபட்ச சேவை காலத்தை நிறைவு செய்த உத்தியோகத்தர்களை முறையாக இடமாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் வைப்புக் கணக்குகளில் இருந்த வித்தியாசங்கள் மற்றும் காசுப் பாய்ச்சல்கள் பற்றிய கூற்றுக்களில் இருந்த வித்தியாசங்கள், நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்ட நேரத்தில் தவறாக ஏற்பட்டனவாகும். 2022 ஆம் ஆண்டில் இத்தகைய பிழைகள் இன்றி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டன. |

E.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| கமநல அபிவிருத்தித் திணைக்களம் முதலாம் பாகம்: 60.00 | |
|---|---|
| குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள் / குழுவால் வழங்கப்பட்ட உத்தரவுகள் | குழுவால் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்ய / வழங்கப்பட்ட பரிந்துரைகளை செயற்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலை |
| நிலையான சொத்துக்களின் பட்டியல் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட்டு இருக்கவில்லை. | பொதுக் கணக்குகள் பற்றிய வழிகாட்டல்கள் இலக்கம் 05 / 2021, 8.1 மற்றும் 2013.07.12 ஆம் திகதிய சுற்றறிக்கை ஆகியவற்றின் பிரகாரம் CIGAS முறைமையின் மூலம் தயாரிக்கப்படும் நிலையான சொத்துக்களின் பட்டியல்களை பேணுமாறு போதிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆகையால், தலைமை அலுவலகத்திற்கும் மற்றும் 25 மாவட்ட அலுவலகங்களுக்கும் என உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பட்டியல்கள் பேணப்படுகின்றன. |
| கணக்காய்வாளர் நாயகம் வினவிய ஒவ்வொரு கணக்காய்வு வினாவுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளிக்கப்பட்டு இருக்கவில்லை. | கணக்காய்வாளர் நாயகத்தினால் சமர்ப்பிக்கப்பட்டு இருந்த ஒவ்வொரு கணக்காய்வு வினாவுக்கும் ஒரு மாத காலப் பகுதிற்குள் பதில்கள் வழங்கப்படாது இருந்தமை ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. நாடு முழுவதிலும் பரந்து காணப்படுகின்ற 562 கமநல சேவை நிலையங்கள் மற்றும் 25 மாவட்ட அலுவலகங்கள் என்பவற்றின் மூலம் கமநல அபிவிருத்தித் திணைக்களம் பொது மக்களுக்கு சேவையை வழங்கி வருகின்றது. மாவட்ட அலுவலகங்களும் மற்றும் கமநல சேவை நிலையங்களும் அந்தந்த மாவட்டத்தின் கணக்காய்வு அதிகாரியின் மூலம் கணக்காய்வு செய்யப்பட்டு கணக்காய்வு வினாக்கள் அனுப்பப்படுகின்றன. இது தவிர, தலைமை அலுவலகத்தின் அரசாங்க கணக்காய்வுப் பிரிவின் மூலமும் அந்தந்த மாவட்ட அலுவலகங்களும் மற்றும் கமநல சேவை நிலையங்களும் கண்ககாய்வு செய்யப்பட்டு கணக்காய்வு வினாக்கள் அனுப்பப்படுகின்றன. இவ்வாறு அனுப்பப்படுகின்ற கணக்காய்வு வினாக்கள் தொடர்பான விளக்கங்கள் மாவட்ட அலுவலகங்கள் மற்றும் கமநல சேவை நிலையங்கள் என்பவற்றின் ஊடாக தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு இறுதிப் பதில்கள் கோவைப்படுத்தப்படுதல் வேண்டும்.<br><br>சில கணக்காய்வு வினாக்களுக்குத் தேவையான விளக்கங்களைப் பெற்று, குறிப்பிட்டவொரு காலப் பகுதிற்குள் இறுதிப் பதில்களைத் தயாரிப்பது நடைமுறை சாத்தியமற்றது. எனவே பதில்களை வழங்குவதில் தாமதங்கள் ஏற்பட்டிருந்தன.<br><br>எவ்வாறாயினும், இறுதி பதில்களை வழங்குவதில் தாமதம் ஏற்பட்ட கணக்காய்வு வினாக்களுக்கு பதிலளிக்க தற்போது உரிய பதில்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. மேலும் உடனடியாக பதிலளிக்க வேண்டிய அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் பதிலளிக்கப்படும் என்பதையும் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.<br><br>எதிர்காலத்தில், இதுபோன்ற பிரச்சினைகளை குறைத்து இறுதிப் பதில்களைத் தயாரிப்பதற்கான முறையான ஒரு முறையியல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இது செயற்படுத்தப்படும் என்பதையும் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| | |
|---|---|
| உள்ளக கணக்காய்வு வினாக்களுக்கு ஒரு மாதத்திற்குள் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | பிரதான உள்ளகக் கணக்காய்வாளரின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்ட உள்ளகக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை 14 நாட்களுக்குள் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் கையொப்பத்துடன் சமர்ப்பிக்குமாறு மாவட்டத்திற்குப் பொறுப்புடைய பிரதி / உதவி ஆணையாளர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த உள்ளகக் கணக்காய்வு அறிக்கை மாவட்டத்திற்குப் பொறுப்புடைய பிரதி / உதவி ஆணையாளரிடம் இருந்து கிடைத்த பின்னர், அந்த அறிக்கையில் உள்ள விடயங்கள் பற்றிய விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு அந்தந்த கமநல சேவை நிலையங்களுக்குப் பொறுப்புடைய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.<br><br>மேற்குறித்த அறிக்கைக்காக விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் தயாரிக்கப்படும் பதில்களில் மாவட்டங்களுக்குப் பொறுப்புடைய பிரதி / உதவி ஆணையாளர்களின் அவதானிப்புகள் அடங்கலாக அவர்களது கையொப்பத்துடன் பதில்களை கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திடம் சமர்ப்பிப்பதற்கான குறித்த செயல்முறைக்கு ஏறக்குறைய ஒரு மாதத்திற்கு மேலான காலம் எடுக்கும். அந்த நிலையைத் தவிர்ப்பதற்கு, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் மற்றும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் என்பவற்றின் போது கவனம் செலுத்தப்படுகின்றது என்பதையும் தயவுடன் அறியத் தருகின்றேன். |
| நி. பி. கு. இலக்கம் 134 (2) இன் பிரகாரம், உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கனக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | நி. பி. கு. இலக்கம் 134 (3) இன்படி உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. பிரதான உள்ளகக் கணக்காய்வாளரின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்ட உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் பிரதி, கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் அணவல் கடிதத்துடன் கணக்காய்வாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.



Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| | |
|---|---|
| 2017.06.26 ஆம் திகதிய 1 / 2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவம் பற்றிய சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம், 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் அகற்றப்பட்ட சொத்துக்கள் பற்றிய தகவல்கள் கட்டுப்பாட்டாளர் அதிபதியின் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | கொள்வனவு செய்த சொத்துக்கள் பற்றிய விபரங்கள் 2021.12. 31 ஆம் திகதி கட்டுப்பாட்டாளர் அதிபதியின் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அகற்றல் பற்றிய விபரங்களை உள்ளீர்ப்பது பற்றிய அறிவுரைகள் கட்டுப்பாட்டாளர் அலுவலகத்தினால் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்கான அத்தகைய அறிவுரைகள் இன்னும் வழங்கப்படவில்லை. மேலும், அந்த அறிவுரைகள் கிடைத்தவுடன் உரிய விபரங்களை உடனடியாக கட்டுப்பாட்டாளர் அதிபதியின் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| 2020.08.28 ஆம் திகதிய 01 / 2020 ஆம் இலக்கப் பொது நிருவாக சுற்றறிக்கையின் 1 ஆம் பாகத்தின் 11.1 ஆம் பந்தியில் குறிப்பிடப் பட்டுள்ள காலப் பகுதிற்குள், நி. பி. கு. இலக்கம் 756 (6) இன் பிரகாரம் பொருட்கள் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு உரிய தினத்திற்கு உரிய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்கான பொருட்கள் கணக்கெடுப்பு அறிக்கைகளும் 2023.03.17, 2023.04.03 ஆம் மற்றும் 2023.05.10 ஆம் திகதிகளில் (1 / 2020 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கால வரையறைக்குள்) கட்டுப்பாட்டாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| | |
|---|---|
| வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பில் இருந்து கண்டறிந்த மிகைகள், பற்றாக்குறைகள் தொடர்பான பரிந்துரைகளும் மற்றும் ஏனைய பரிந்துரைகளும் உரிய காலப் பகுதியினுள் நடைமுறைப்படுத்தப் பட்டு இருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பற்றாக்குறைகள் மற்றும் மிகைகள் ஆகியன தொடர்பான சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு 2023 ஆம் ஆண்டிற்கான பொருட்கள் கணக்கெடுப்பு நியமன விடயங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.<br><br>2023 ஆம் ஆண்டில், 1 / 2020 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப் பகுதிக்குள் பொருட்கள் கணக்கெடுப்பு விடயங்களை நிறைவு செய்து அது தொடர்பான அறிக்கைகளை கட்டுப்பாட்டளர் அதிபதிக்கு குறித்த காலப் பகுதிக்குள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது. |
| அனைத்து வாகனங்களினதும் உரிமையை உறுதிப் படுத்துகின்ற ஆவணங்கள் இருந்திருக்கவில்லை. | கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு என ஆணையாளர் நாயகத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை 142 ஆகும். இவற்றில் 10 வாகனங்களுக்கான பதிவுச் சான்றிதழ்களின் பிரதிகள் இல்லாததால் அவற்றுக்கான மூலப்பிரதிகளை பெற்றுக் கொள்ளும் பொருட்டு 7 / 4 / 1 /ஆம் இலக்க வாகனப் பிரச்சினைகள் பற்றி 2024.01.01 ஆம் திகதி குருந்துவத்தை பொலிஸ் நிலையத்தில் ஒரு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, அந்த முறைப்பாட்டின் பிரதியை பெற்றுக் கொண்டு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்து, வாகன பதிவு சான்றிதழ்களின் பிரதிகளை பெற நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>மேலும், கமநல அபிவிருத்தி ஆணையாளரின் பெயரில் பதிவு செய்யப்படாத 15 வாகனங்கள் உள்ளன. இவற்றை பதிவு செய்து கொள்ளும் பொருட்டு (தற்பொழுது மூடப்பட்டுள்ள நிறுவனம்) 2018.10.10 ஆம் திகதிய 03 / 2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவம் பற்றிய சுற்றறிக்கையின் பிரகாரம் கட்டுப்பாட்டாளர் அதிபதியின் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்க முடியும் என்பதால் அந்த 15 வாகனங்கள் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. உரிய அறிவுரைகளின் பேரில் மேல் நடவடிக்கை எடுக்கப்படும். |
| பொது வாகனக் கொட்டகையில் உள்ள வாகனங்களுக்கான நாளாந்த ஓட்டக் குறிப்புகள் மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகள் என்பன கக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | பொது வாகனக் கொட்டகையில் உள்ள வாகனங்களுக்கு உரிய நாளாந்த ஓட்டக் குறிப்புகளும் மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளும் எதிர்வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வுப் பிரிவுக்கு சமர்ப்பிக்கப்படும். ஏற்கனவே கணக்காய்வுப் பிரிவுக்கு வழங்கப்பட்டிருப்பது 2023 ஆம் ஆண்டு திசம்பர் மாதத்திற்கான நாளாந்த ஓட்டக் குறிப்புகள் மட்டுமேயாகும். அந்த மாதாந்த சுருக்க அறிக்கைகளையும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| | |
|---|---|
| அனைத்து வாகனங்களினதும் அரச சின்னங்களுக்கு நிறம் பூசப்பட்டு இருக்கவில்லை. | திணைக்களத்தின் வாகனங்களுக்கு அரச இலட்சினையுடன் கூடிய ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டுள்ளன. நீடிக்கக்கூடிய காலம் தாண்டியிருப்பதால் அந்த ஸ்டிக்கர்களின் நிறம் மாறியுள்ளது. தற்பொழுது அந்த அரச இலட்சினைகளுக்கு நிறம் பூசும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| வாகனங்கள் பாவனைக்கு ஒவ்வாத நிலைக்கு மாறிய பின்னர், 08 மாதங்களுக்கு குறைந்த ஒரு காலப் பகுதியில் அந்த வாகனங்கள் அகற்றப்பட்டு இருக்கவில்லை. | 13 வாகனங்கள் தொடர்பான அகற்றல் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு என ஆணையாளர் நாயகத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள 10 வாகனங்களுக்கான பதிவு சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் இல்லாததால் உரிமையை உறுதிப் படுத்திக் கொள்ள முடியாத காரணத்தினால் அகற்றும் பணிகளை மேற்கொள்ள முடியவில்லை. ஆகையால், அந்த வாகனங்களின் மூலப்பிரதிகளைப் பெற்றும் கொள்ளும் பொருட்டு 7 / 4 / 1 / ஆம் இலக்க வாகனப் பிரச்சினைகள் பற்றி 2024.01.01 ஆம் திகதி குருந்துவத்தை பொலிஸ் நிலையத்தில் ஒரு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, அந்த முறைப்பாட்டின் பிரதியை பெற்றுக் கொண்டு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்து, வாகன பதிவு சான்றிதழ்களின் பிரதிகளை பெற நடவடிக்கை எடுக்கப்படும். |
| | மேலும், கமநல அபிவிருத்தி ஆணையாளரின் பெயரில் பதிவு செய்யப்படாத 15 வாகனங்கள் உள்ளன. இவற்றை பதிவு செய்து கொள்ளும் பொருட்டு (தற்பொழுது மூடப்பட்டுள்ள நிறுவனம்) 2018.10.10 ஆம் திகதிய 03 / 2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவம் பற்றிய சுற்றறிக்கையின் பிரகாரம் கட்டுப்பாட்டாளர் அதிபதியின் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்க முடியும் என்பதால் அந்த 15 வாகனங்கள் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. உரிய அறிவுரைகளின் பேரில் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>ஆகையால், உரிய பிரச்சினைகளை தீர்த்த பின்னர் 2024 ஆம் ஆண்டில் வாகனங்களை அகற்றும் பொருட்டு ஒரு விஷேட குழுவை நியமித்து முறையான ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |
| ஒவ்வொரு வாகனத்திற்கும் குறிப்புப் புத்தகங்கள் இற்றைப்படுத்தல் அடிப்படையில் பேணப்பட்டு இருக்கவில்லை. | ஏற்கனவே வாகனங்களின் பதிவு புத்தகங்கள் இற்றைப்படுத்தப்பட்டுள்ளன. |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla



Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| | |
|---|---|
| அரச வாகன விபத்துக்கள் தொடர்பாக, நி. பி. கு. இலக்கம் 103, 104, 109 மற்றும் 110 ஆகியவற்றின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | நி. பி. கு. இலக்கம் 103 ,104 ,109 மற்றும் 110 ஆகியவற்றின் பிரகாரம் பின்வரும் வாகனங்களின் நிமித்தம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>**53-9816** - இந்த வாகனத்தின் விபத்து தொடர்பாக புத்தளம் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு இருந்த 2704 / எம் இலக்க வழக்கு 2021.02.18 ஆம் திகதி முடிவடைந்துள்ளது. நஷ்டஈடாக திணைக்களத்தினால் கணிப்பிடப்பட்டுள்ள ரூ. 149,750.00 பணம் A / 24 716613 ஆம் இலக்க 2021.02.16 ஆம் திகதிய பற்றுச்சீட்டுடன் புத்தளம் கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்திற்கு இந்த வழக்கின் பிரதிவாதியான திரு செய்னுல் ஆப்தீன் மொஹமட் சியாட் என்பவரினால் செலுத்தப்பட்டுள்ளது.<br><br>**56-8055**- இந்த நஷ்டஈட்டுத் தொகையை அறவிடுவதற்கு போதிய ஆவணங்கள் திணைக்களத்திடம் இல்லாததால் குறித்த வழக்கின் நடுத்தீர்ப்பை வினவி நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.<br><br>இந்த வழக்கின் இறுதியில் கிடைத்த தீர்ப்பு மற்றும் விபத்து நட்டத்திற்கு பொறுப்புக்கூற வேண்டிய சாரதியிடம் இருந்து அறவிடப்பட்டுள்ளதா என அறிவிக்குமாறு 2023.05.02 ஆம் திகதி இரத்தினபுரி கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளருக்கு ஒரு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்திற்கு பதிலளிக்கும் வகையில் குறித்த வழக்கின் தீர்ப்பினது பிரதியை பெற்றுக் கொள்ளும் பொருட்டு இரத்தினபுரி கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளரினால் எம்பிலிப்பிட்டிய கௌரவ நீதிவான் அவர்களுக்கு அனுப்பிய 2023.06.26 ஆம் திகதிய கடிதம் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை கிடைத்தவுடன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.<br><br>**PB-5280** - இந்த விபத்து தவிர்க்க முடியாத ஒரு விபத்து என்பதால் நட்டம் வாகனத்திற்கு ஏற்பட்ட ஒரு நட்டமாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆகையால், நி. பி. கு. இலக்கம் 109 இன் பிரகாரம் குறித்த நட்டத்தை கணக்குப் புத்தகத்தில் இருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.



Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| | |
|---|---|
| | **250-2078** - 2015.11.24 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் அனுராதபுர கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்தில் இருந்து நி. பி. கு. இலக்கம் 104 (3) இன்படி, நட்டங்கள் தொடர்பான பூர்வாங்க அறிக்கை நி. பி. கு. இலக்கம் 104 (4) பிரகாரம் நட்டங்கள் தொடர்பான இறுதி அறிக்கையாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.<br><br>இது தொடர்பாக மேல் நடவடிக்கையை எடுக்கும் பொருட்டு நி. பி. கு. இலக்கம் 109 இன் பிரகாரம் குறித்த நட்டத்தை கணக்குப் புத்தகத்தில் இருந்து பதிவழிப்பதற்கு உரிய ஆவணங்கள் தயாரிக்கும் பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது.<br><br>**53-9830**- இது சம்பந்தமாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூலம் ஒரு நஷ்டஈட்டு வழக்கை தாக்கல் செய்வதற்கு தேவையான பணிகளை நிறைவேற்றித் தருமாறு கோருகின்ற 7 / 1 / 2 / 32 / 1 ஆம் இலக்க 2013.12.12 ஆம் திகதிய கடிதம் கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளரினால் (குருனாகல்) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது (பின்னிணைப்பு 10). ஆதலால், குருனாகல் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இலக்கம் 15 / MD என்ற வழக்கின் மூலம் இந்த நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>குருனாகல் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இலக்கம் 15 / MD என்ற வழக்கின் இரண்டாவது பிரதிவாதியான வ / ப கூட்டுறவு காப்பு நிறுவனம் ரூ. 51,750 பணத்தை செலுத்த உடன்பட்டுள்ளது. அந்த பணத்தை பெற்றுக் கொண்டு குறித்த வழக்கை வாபஸ்பெறுவதற்கு கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் அவரின் இணக்கத்தை தெரிவித்துள்ளார். ஆதலால் தற்பொழுது குறித்த வழக்கு நிறைவு செய்யப்பட்டுள்ளது.<br><br>ஏனைய விபத்துக்கள் தொடர்பான கோவைகளுக்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| 2016.12.29 ஆம் திகதிய 2016 / 30 ஆம் இலக்கப் பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப் பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், நிறுவனத்திற்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பற்றிய எந்தவித சோதனையும் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டிற்கான எரிபொருள் நுகர்வு பற்றிய சோதனையை மேற்கொள்ளும் முகமாக முறையான ஒரு குழு நியமிக்கப்பட்டது. அப்போது நாட்டில் நிலவிய எரிபொருள் நெருக்கடியும் மற்றும் பற்றாக்குறையும் காரணமாக எரிபொருள் நுகர்வு பற்றிய சோதனையை முறையாக மேற்கொள்ள முடியவில்லை. இந்த ஆண்டில் எரிபொருள் நுகர்வு பற்றிய குறித்த சோதனையை மேற்கொள்ளும் பொருட்டு நடவடிக்கை எடுக்கப்படும். 2024 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 12 வாகனங்களின் நிமித்தம் எரிபொருள் நுகர்வு பற்றிய சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.



Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and ... Industries
No.80/5, "Govijana M...
Rajamalwatta Avenue, B...

| | |
|---|---|
| வங்கி இணக்கல் கூற்றுக்களில் இருந்து கண்டறிந்த சீராக்க வேண்டி இருந்த நிலுவை தொடர்பாக, நி. பி. கு. இன் பிரகாரம் ஒரு மாதத்திற்குள் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | 2021.12.31 ஆம் திகதிற்கு இணங்காணப்படாத கிடைப்பனவுகள் மற்றும் இனங்காணப்படாத கொடுப்பனவுகள் நி. பி. கு. இலக்கம் 396 இன் பிரகாரம் பகுதியளவில் தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளன. மேலும் தீர்ப்பனவு செய்யப்படவுள்ள பெறுமானம் கண்டறியப்படாத கிடைப்பனவுகள் மற்றும் பெறுமதி கண்டறியப்படாத கொடுப்பனவுகள் ஆகியவற்றில் ஓரளவு தீர்ப்பனவு செய்யப்படவுள்ளது. |
| நி. பி. கு. இலக்கம் 94 (1) இன் பிரகாரம், ஒரு செலவின தலைப்புக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டைப் பயன்படுத்திய பின்னர் எஞ்சிய நிதி ஒதுக்கீட்டு வரையறை, அனுமதித்து இருந்த வரையறைகளை விஞ்சி பொறுப்புக்களை சுமத்தி இருந்தது. உரிய காலம் தாண்டியும் ஏனைய நிறுவனங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டு இருந்தது. | நி. பி. கு. இலக்கம் 94 (1) இன் பிரகாரம் மேலும் செலவினத் தலைப்புகளின் நிதியேற்பாடுகள் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் எஞ்சியுள்ள நிதியேற்பாட்டு அளவை விஞ்சி பொறுப்புக்கள் ஏதும் ஏற்படுத்திக் கொள்ளடப்படவில்லை. |
| அரச ஊழியர்களின் முன்கூட்டிய பணிகளுக்கு, பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டு இருந்த மட்டுப்பாடுகள் விஞ்சியமைக்கு அணவல் அங்கீகாரம் பெறப்பட்டு இருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் 'பீ' முற்பணக் கணக்ககளின் வரையறை அளவை கோரும் போது திணைக்களத்தின் மூலம் கண்டறிந்த ஆகக்குறைந்த கிடைப்பனவுகளின் வரையறை 200 மில்லியன் ரூபா என கோரினாலும், தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் மூலம் 290 மில்லியன் ரூபா என அனுமதிக்கப்பட்டு இருந்தது.<br><br>ஆகக்குறைந்த கிடைப்பனவு வரையறை 290 மில்லியன் ரூபா என்ற இலக்கை அடைந்து கொள்ள முடியாது போனதால் 2021 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் அந்த வரையறையை 250 மில்லியன் ரூபா என திருத்தும் பொருட்டு நிதி அமைச்சுக்கு குறிப்பீடு செய்யப்பட்டது. அதன்படி தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் மூலம் ஆகக்குறைந்த கிடைப்பனவு வரையறை 250 மில்லியன் ரூபா என திருத்தப்பட்டு BD / AA / LR / 01 / 2022 ஆம் இலக்க 2021.12.31 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அனுமதி வழங்கப்பட்டு இருந்தது. |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.



Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| | |
|---|---|
| ஒரு வருடத்திற்கும் மேலாக இருந்து வருகின்ற கடன் நிலுவைகள் அவதானிக்கப்பட்டன. | காலாவதியான கடன் நிலுவைத் தொகையை அறவிடும் பொருட்டு, சம்பந்தப்பட்ட தரப்பினருக்கும் மற்றும் நிறுவனங்களுக்கும் தகவல் அறிவிக்கப்பட்டு, கடிதங்கள் அனுப்பப்பட்டு, கணிசமான அளவு கடன் நிலுவைகளை அறவிடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், மூலங்களை இனங்காண முடியாத அல்லது ஒரு போதும் மீளறவிட முடியாத கடன் நிலுவைகளை கணக்குப் புத்தகங்களில் இருந்து பதிவழிக்கும் பொருட்டு அமைச்சுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. |
| பொது வைப்புக் கணக்குகளின் காலம் தாண்டிய வைப்புகள் தொடர்பாக, நி. பி. கு. இலக்கம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | பொது வைப்புக் கணக்கில் காலாவதியாகி இருந்த வைப்புக்களை திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்தில் இருந்து வசக்கட்டுநிதி கிடைப்பனவுகளுக்கு இணங்க முந்துரிமை அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. வசக்கட்டுநிதி கிடைப்பனவுகளுக்கு இணங்க எதிர்காலத்தில் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |
| வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை உரியவாறு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | ➢ 2019 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை மூன்று மொழிகளிலும் அச்சிடப்பட்டு 12 பிரதிகளுடன் 2023.11.27 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.<br><br>➢ 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான செயலாற்றுகை அறிக்கைகள் அமைச்சின் அங்கீகாரத்தின் நிமித்தம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.<br><br>➢ 2023க்கான செயல்திறன் அறிக்கையைத் தயாரிப்பதற்கான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. |
| நிறுவனத்திற்கு கிடைத்து இருந்த வெளிநாட்டு உதவி தொடர்பாக, 1994.04.20 ஆம் திகதிய 30 / 94 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | 30 / 94 ஆம் இலக்க 1994.04.20 ஆம் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வெளிநாட்டு உதவிகள் கிடைக்கும் கருத் திட்டங்களின் செலவுகள் உரிய செலவினத் தலைப்புகள், நிகழ்ச்சித் திட்டங்கள், கருத் திட்டங்கள் மற்றும் செலவினக் குறியீட்டு இலக்கங்கள் என்பவற்றின் கீழ் மாதாந்த கணக்குகளின் சுருக்க அறிக்கைகளின் மூலமும் மற்றும் மாற்றல் கட்டளைகளின் மூலமும் திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.<br><br>மேலும், 2021.12.31 ஆம் திகதிக்கு செலவு செய்யப்படாது எஞ்சியுள்ள நிதியை, குறித்த ஆண்டு இறுதிக் கணக்குகள் தீர்ப்பனவு செய்யப்படும் போது பொதுத் திறைசேரிக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.



Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agricul... Industries
No.80/5, ...
Rajamalwatta ...

| இரண்டாம் பாகம்: 48.00 | |
|---|---|
| கேட்கப்படும் தகவல்கள் பெற்றுக் கொடுக்கப்படாமை தொடர்பாக செய்யப்படும் முறைப்பாடுகள் பட்டியல்படுத்தப்பட்டு, அத்தகைய முறைப்பாடுகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை தெளிவுபடுத்தும் ஆவணங்கள் பேணப்பட்டு இருக்கவில்லை. | கோரப்படும் தகவல்கள் வழங்கப்படாமை தொடர்பாக சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகளை ஆவணப்படுத்துவதற்கும், அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றி விளக்கமளிக்கும் ஆவணத்தை பேணுவதற்கும் என ஒரு முறையியல் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. இது வரையில் கோரப்பட்ட தகவல்களை தவறாமல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| நிறுவனம் பற்றிய தேவையான தகவல்களை பொதுமக்களுக்கு வழங்க ஒரு இணையத் தளம் உருவாக்கப்பட்டு பேணப்பட்டு இருக்கவில்லை.<br><br>நிறுவனத்தில் பேணப்படும் இணையத் தளத்தின் மூலம் பொதுமக்களின் முறைப்பாடுகளையோ அல்லது பாராட்டுக்களையோ பதிவு செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டு இருக்கவில்லை. | ➢ இந்தத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளம் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் உதவியுடன் தயாரிக்கப்பட்டது. மேலும் இந்த இணையத் தளத்தை உருவாக்கும் போது இதன் பொதுவான தகவல்களை மட்டும் இற்றைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.<br><br>➢ கணக்காய்வாளரினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள கணக்காய்வு விடயங்களை நடைமுறைப்படுத்தும் பொருட்டு அதிக பணமும் மற்றும் நேரமும் விரயமாகும் என்பதால், www.agrariandepat.lk என்ற திணைக்களத்தின் இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ள இணைப்பின் மூலம் www.agrarian.lk இணையத் தளத்தில் திறக்கப்படும் ஒரு இணையத் தளப் பக்கத்தில் பொது மக்கள் தமது கருத்துக்களை தெரிவிக்கக் கூடிய வகையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.<br><br>➢ மேலும், ஊழல் மற்றும் மோசடிகள் என்பன தொடர்பாக பொது மக்கள் தமது முறைப்பாடுகளை செய்யக் கூடிய வகையில் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்தின் நுழைவாயில் முன்னால் ஒரு பெட்டியும் வைக்கப்பட்டுள்ளது. |
| பிரஜை / வாடிக்கையாளர் சாசனம் உரிய முறையில் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | பிரஜைகள் / வாடிக்கையாளர் சாசனத்தை தயாரிக்கும் பொருட்டு உரிய தகவல்கள் திணைக்களத்தின் உரிய பிரிவுகளினால் கோவைப்படுத்தப்பட்டு வருகின்றன. இதனை விரைவில் தயாரித்து செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

தயாரிக்கப்பட்ட மனிதவளத் திட்டத்தின் மூலம் பதவியணியில் 50% வீதத்திற்கும் அதிகமான ஊழியர்களுக்கு வருடத்திற்கு குறைந்தபட்சம் 12 மணித்தியால பயிற்சி வாய்ப்பு உறுதிப் படுத்தப் பட்டு இருக்கவில்லை.

2020 ஆம் ஆண்டில் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் பயிற்சிப் பிரிவின் மூலம் தயாரிக்கப்பட்டு இருந்த 2021 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டத்தின் மூலம் இந்தத் திணைக்களத்தின் 785 ஊழியர்களுக்கு 11 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் (மதிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ. 3,000,000.00) திட்டமிடப்பட்டு இருந்தன. மேலும், 2021 ஆம் ஆண்டிற்கான குறித்த செயல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள 05 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நீக்கப்பட்டு 2021 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டத்தில் உள்ளடக்கப்படாத ஆயினும் சேவைகளின் தேவையினதும் மற்றும் உத்தியோகத்தர்களின் வேண்டுகோள்களினதும் பிரகாரம் முன்னுரிமை வழங்க வேண்டிய 06 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

**2021 ஆம் ஆண்டின் செயல் திட்டம் பற்றிய சுருக்க விபரம்**

| விபரம் | பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | மதிப்பிடப்பட்டுள்ள செலவு (ரூ.) | உண்மையான செலவு (ரூ.) | இலக்குக் கொள்ளப் பட்ட பங்கேற்பு | உண்மையான பங்கேற்பு |
|---|---|---|---|---|---|
| 2021 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டத்தின் பிரகாரமுள்ள பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 11 | 3,000,000.00 | - | 785 | - |
| (-) 2021 செயல் திட்டத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ள பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | (05) | (1,050,000.00) | - | (300) | - |
| 2021 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டத்தின் பிரகாரம் நடத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் | 06 | 1,950,000.00 | 1,361,770.00 | 485 | 306 |
| (+) 2021 ஆம் ஆண்டு புதிதாக நடத்தப்பட்டுள்ள பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 06 | | 1,963,075.50 | - | 190 |
| 2021 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டுள்ள பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 12 | | 3,324,845.50 | | 496 |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.



Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| | |
|---|---|
| | அதன்படி 2021 ஆம் ஆண்டு இறுதியில் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் பயிற்சிப் பிரிவின் மூலம் 496 ஊழியர்களின் நிமித்தம் 12 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. |
| அனைத்து ஊழியர்களும் சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் கூற்றுக்களை சமர்ப்பித்து இருக்கவில்லை. | எனது 7 / 2 / 2 / 5 / 1 / 3 (IV) (தற்காலிக) ஆம் இலக்க 2022.04.07 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் சகல தகவுடைய அதிகாரிகளுக்கும் அந்தந்த ஒவ்வொரு ஆண்டினதும் மார்ச் மாதம் 31 ஆம் திகதியில் இருந்த தமது சொத்துக்கள் பொறுப்புக்கள் பற்றிய வெளிப்படுத்தல்களை வருடாந்தம் செய்ய வேண்டும் எனவும் மற்றும் அந்த சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் கூற்றுக்களை குறித்த ஆண்டின் ஜூன் மாதம் முப்பதாம் திகதியளவில் பெற்றுக் கொடுக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டின் உரிய சுற்றறிக்கை மற்றும் உரிய அறிவுரைகள் என்பவற்றின் பிரகாரம் சகல சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் கூற்றுக்களையும் இற்றைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |
| ஊழியர்களினால் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டங்கள் நி. பி. கு. இலக்கம் 156 (1) இன் பிரகாரம் அறவிடப்பட்டு இருக்கவில்லை. | உத்தியோகத்தர்களினால் அரசாங்கத்திற்கு ஏற்படுத்தப்பட்ட நட்டங்கள் தொடர்பாக ரூ. 71,321,516.57 தொகை அறவிடப்பட வேண்டியுள்ளது. அதில் ரூ. 43,876,127.74 தொகையை திணைக்களத்தின் மூலம் அறவிடுவதற்கும், ரூ. 27,445,388.83 தொகையை சட்ட நடவடிக்கைளின் மூலம் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

L.P.S. Kumara
Chief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Aveue, Battaramulla.



Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

| | |
|---|---|
| அதிகபட்ச சேவைக் காலத்தை நிறைவு செய்த உத்தியோகத்தர்கள் முறையாக இடமாற்றம் செய்யப்பட்டு இருக்கவில்லை. | • 2020 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய கொரோனா தொற்றுநோய் காரணமாக வருடாந்தம் இடமாற்றம் செய்ய முடியவில்லை. எனினும் 2021 ஆம் ஆண்டில் வருடாந்த உள்ளக இடமாற்றல் செயல்முறை நடைமுறைப்படுத்தப்பட்டது.<br><br>• 2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருடிக்கடி நிலவியதையடுத்து ஊழியர்களை இடமாற்றம் செய்யும் போது ஊழியர்கள் முகம்கொடுக்க நேரிடும் கஷ்டங்களின் காரணமாக இடமாற்றம் நிறுத்தப்பட்டது.<br><br>• திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டு நீண்டகாலமாக ஒரே மாவட்ட அலுவலகத்தில், கமநல சேவை நிலையத்தில் அல்லது வி. ஆ. உ. உ. பிரிவில் பணியாற்றுகின்ற கமநல அபிவிருத்தி உத்தியோத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், நிலைய முகாமைத்துவ உதவியாளர், விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர், தொழிலாளர் காவலாளி முதலிய பதவிகளுக்கு 2023.05.02 ஆம் திகதி ஒரு உள்ள இடமாற்ற செயல்முறை தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.<br><br>• 2023 ஆம் ஆண்டில் ஊழியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர். மேலும், 2024 ஆம் ஆண்டில் வருடாந்த உள்ளக இடமாற்றத்திற்காக ஊழியர்களிடம் இருந்து விண்ணப்பங்களை அழைக்குமாறு சகல மாவட்ட அலுவலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>• அதே போல், 2024 ஆம் ஆண்டிலும் இந்த நடைமுறை தொடர்ச்சியாக பின்பற்றப்படுகின்றது. |

L.P.S. Kumara
hief Finance Officer-Fertilizer Division
Ministry of Agriculture
No.80/5, "Govijana Mandiraya",
amalwatta Aveue, Battaramulla.

Janaka Dharmakeerthi
Secretary
Ministry of Agriculture and Plantation Industries
No.80/5, "Govijana Mandiraya",
Rajamalwatta Avenue, Battaramulla.

**பின்னிணைப்பு : 01**

| | මුළු නිලධාරීන් ගණන | මියගිය නිලධාරීන්ගෙන් අයවිය යුතු ණය ශේෂ | | විශ්‍රාම ගිය නිලධාරීන්ගෙන් අයවිය යුතු ණය ශේෂ | | විශ්‍රාම වැටුපක් රහිත නිලධාරීන්ගෙන් අයවිය යුතු ණය ශේෂ | | වැඩ තහනම් කළ නිලධාරීන්ගෙන් අයවිය යුතු ණය ශේෂ | | සේවය හැරගිය නිලධාරීන්ගෙන් අයවිය යුතු ණය ශේෂ | | වැටුප් සහිත විදේශගත නිලධාරීන්ගෙන් අයවිය යුතු ණය ශේෂ | | මධ්‍යගත කිරීම යටතේ මාරු කළ නිලධාරීන්ගෙන් අයවිය යුතු ණය ශේෂ | | ශේෂය |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | නිලධාරීන් ගණන | රු. | නිලධාරීන් ගණන | රු. | නිලධාරීන් ගණන | රු. | නිලධාරීන් ගණන | රු. | නිලධාරීන් ගණන | රු. | නිලධාරීන් ගණන | රු. | නිලධාරීන් ගණන | රු. | රු. |
| 2022.05.17 දින 2022 විගණකාධිපති සම්පිණ්ඩන වාර්තාවට අදාලව ණය ශේෂය | 154 | 20 | 2,211,596.30 | 85 | 6,435,977.50 | 7 | 126,087.00 | 4 | 20,832.15 | 31 | 1,656,432.48 | 3 | 218,495.60 | 4 | 143,392.00 | **10,812,813.03** |
| 2024.01.31 දක්වා අයවීම් | 104 | 9 | 1,196,316.43 | 78 | 6,060,300.50 | 4 | 115,287.00 | 3 | 18,832.15 | 9 | 656,211.48 | 0 | - | 1 | 59,377.00 | **8,106,324.56** |
| 2024.01.31 දිනට ශේෂය | 50 | 11 | **1,015,279.87** | **7** | **375,677.00** | **3** | **10,800.00** | **1** | **2,000.00** | **22** | **1,000,221.00** | **3** | **218,495.60** | **3** | **84,015.00** | **2,706,488.47** |